# செம்மணி

நிலம் 3 துகள் 130 வள்ளுவர் ஆண்டு 2052, 14 - 20 தை 2023 வாரமலர் பக்கங்கள் 28

### தமிழ்நாடு - யாழ்ப்பாண

# மீனவரை நேருக்குநேர் மோதவிட அமைச்சர் டக்ளஸ் முழு முயற்சி

### குருநகர் கடற்றொழிலாளர்களைக் கொம்புசீவி விட்டுள்ளார்

இரு பெரிய இருப்புப் படகுகளைத் தருகின்றேன் அவற்றைக் கொண்டு அத்துமீறி வரும் மீன்பிடிப் படகு களை இடித்து விரட்டுங்கள், பிடித்து வாருங்கள் என்று யாழ்ப் பாண மீனவர்களைத் தூண்டிவிட்டு நடுக்கடலில் இரு தரப்பு மீனவர்க ளையும் மோதவிடுவதற்கு முயற் சியில் இறங்கியிருக்கிறார் மீன்பி டித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. இந்திய மீனவர்களி டமிருந்த கைப்பற்றப்பட்ட இரு பெரிய இரும்புப் படகுகளை இதற் காகக் குருநகர் மீனவர்களுக்கு இந்த வாரம் தான் நிச்சயம் தருவார் என்றும் அவர் தெரிவித்தார்.
இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவது போருக்குப் பின்னரான காலத்தில் பல வருடங்களாகவே இடம்பெற்று வருகின்றது. இதனால் தமது கடற்றொழில் பாதிக்கப்படுவதுடன் பல கோடி ரூபா

பக்கம் 03

# முதலில் தீர்வு பிறகே பொங்கல்

### ரணிலின் யாழ்ப்பாணக் கொண்டாட்டத்திற்கு கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள தேசிய பொங்கல் விழாவை எதிர்த்துப் பேரணி நடத்தப் போவதாக யாழ். பல்கலைக்கழக மாண வர்கள் அறிவித்துள்ளனர். தமிழர்க ளுக்கு முதலில் தீர்வைத் தந்துவிட்டு அரச தலைவர் பொங்க லைக் கொண்டாடட்டும் அதில் தமிழர்களும் கலந்துகொள்வார்கள் என்று அவர்கள் தெரிவித்தனர். அத்தோடு இந்தப் பொங்கல் விழாவை தமிழ் நாடா ளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் வாதிகளும் புறக்கணிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.
பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அறையில் வெள்ளிக்கிழமை செய்தியா ளர்களைச் சந்தித்த மாணவர் அமைப் புத் தலைவர்கள் இந்த அறிவிப்பை விடுத்தனர்.
அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கும் பொங்கல் விழாவை எதிர்ப் பது என்கிற முடிவு பொது அமைப்புக் களுடன்

பக்கம் 03

# அரகலயவினரும் தேர்தலில் போட்டி

அரச தலைவராக இருந்த வரான கோட்டாபய ராஜ பக்சவை பதவியிலிருந்து அகற்றுவதற்குக் காரண மாக இருந்த அரகலய என்கிற மக்கள் எழுச்சி யின் செயற்பாட்டாளர்க ளாக இருந்தவர்களும் எதிர்வரும் ஊராட்சித் தேர்தலில் போட்டியிடுவ தற்கு வேட்புமனுக்கள் தாக்கல் செய்து வருகின்ற னர்.
கொழும்பில் அதிகாரத் தைக் கைப்பற்றி முதல் மாற்றத்தை ஏற்படுத்து வதே தமது திட்டம் என்று செயற்பாட்டாளர்களில் ஒருவரான டினேஸ் அலி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.
பலூன் சின்னத்தின் கீழ் இவர்கள் போட்டியிடவுள் ளனர். அவர்களுக்கான கட்டுப்பணம் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளதாக

பக்கம் 02

# இயக்கக்காரர் எல்லோரும் இனி ஒரே அரசியல் அணி

### புளொட்—ரெலோ—ஈபிஆர்எல்எவ்.— முன்னாள் புலிகள் இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

ஊராட்சி மன்றத் தேர்தல்களையொட்டி தமிழ் அரசியல் அரங்கில் கட்டவிழ்ந்துவரும் காட்சி களின் விரிவாக முன்னாள் இயக்கத்தினர் அனைவரும் ஒன்றிணைந்து தனி அரசியல் அணியாக உருவெடுத்துள்ளனர். அது தொடர் பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தாம் சனிக் கிழமை கையெழுத்திடுவார்கள் என்று புதிய அணியில் அங்கம் வகிக்கும் தலைவர் கள் வெள்ளிக்கிழமை அறிவித்தனர்.
புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன ஒன்றிணைந்து இந்தப் புதிய கூட் டணியை உருவாக்கியுள்ளன. இதன் பெயர் மற்றும் சின்னம் குறித்து சனிக்கிழமை அறி விக்கப்படும் என்றும் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்தனர்.
இந்தப் புதிய கூட்டணி தொடர்பாக நடந்து வந்த பேச்சுக்களில் பங்கேற்றிருந்த முன்னாள் நீதியரசர் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணியும் யாழ். மாநகரசபை முன்னாள் மேயர்

பக்கம் 02

# படைக் குறைப்பை அறிவித்து அரசு

### 2030இல் தரைப்படை அரைவாசியாகும்

இலங்கைத் தரைப் படையினரின் எண்ணிக்கையை 2 இலட்சத்திலிருந்து ஒரு லட்சத்து 35 ஆயிரமாகக் குறைக் கப் போவதாக இலங்கை அரசு அறி வித்திருக்கின்றது. பொருளாதார மீட் சிக்கு உதவும் வகையில் இந்த நடவ டிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2024ஆம் ஆண்டு இந்தப் படை குறைப்பு நவடிக்கை இடம்பெறும் என்று பாதுகாப்பு அமைச்சு வெள்ளிக் கிழமை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. 2030ஆம் ஆண்டு ஒரு லட்சம்

பக்கம் 28



இனிய

# தமிழ்ப் புத்தாண்டு

# பொங்கல்

நல்வாழ்த்துக்கள்

செம்மண் குடும்பத்தினர்

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்



# படைக் குறைப்பு மட்டுமல்ல படை அகற்றலும் முக்கியம்

இலங்கைத் தரைப் படையினரின் எண்ணிக்கையைக் குறைக்கப் போவதான அறிவிப்பு ஒன்று அரசிடமிருந்து வந்துள்ளது. நாட்டின் பாதுகாப்புத்துறைக்கான ஒதுக்கீடு என்பது தாங்கமுடியாத அளவிற்குப் பெரியது. அதனால் அப்பாவிப் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். நாடு இவ்வளவு பெரும் பொருளாதார நெருக்கடியில் இருக்கும் போதும் பாதுகாப்புச் செலவைக் குறைக்க முடியாத அளவிற்கு அதன் வகிபாகம் ஆதிக்கம் செலுத்துகின்றது.
நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதிலும் இது கணிசமான செல்வாக்குச் செலுத்துகின்றது. ஏனெனில் முப்படைகளினதும் பெரும் பகுதி வடக்கு கிழக்குப் பகுதிகளிலேயே நிலை நிறுத்தப்பட்டுள்ளன. போருக்குப் பின்னரான இந்த 14 வருடங்களில் மீண்டும் ஒரு ஆயுத மோதலுக்கான அச்சுறுத்தல் ஏதும் இல்லாதபோதும் அரசு இயந்திரம் படைகளை தமிழர் பகுதிகளில் நிலைநிறுத்தியிருப்பது நல்லிணக்கத்தையும் தொடர்ந்து பாதித்து வருகின்றது.
இவற்றையெல்லாம் சரிசெய்வதற்கு படைக்குறைப்பும் படைகளை வடக்கு கிழக்கில் இருந்து போதியளவிற்கு அகற்றுவதும் முக்கியமானவை. அதனை போர்க் கால படைத்துறை அதிகாரிகளே கூட இன்று ஏற்று வருகின்றார்கள். அப்படிப் பார்க்கையில் அரசு அறிவித்துள்ள படைக்குறைப்பு நடவடிக்கை வரவேற்கத்தக்கதுதான்.
இருந்தாலும் அது உண்மையாக நிறைவேற்றப்பட வேண்டும். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக பன்னாட்டு உதவிகளைப் பெறும் கண்துடைப்பு நடவடிக்கையாக இது ஒருபோதும் அமையக்கூடாது. அதற்கு தரைப் படை எண்ணிக்கையை 2030ஆம் ஆண்டு அரைவாசியாகக் குறைப்போம் என்று அறிவித்திருப்பது போன்று வடக்கு கிழக்கிலிருந்து படையினரை அகற்றுவதற்கான வழி வரைபடத்தையும் அரசு அறிவிக்க வேண்டும்.
வடக்கு கிழக்கில் படையினருக்கு காணிகளைச் சுவீகரிக்கும் முயற்சிகள் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கையில், அந்த உள்நோக்கம் தொடர்கையில் படைக்குறைப்பு என்கிற அரசின் அறிவிப்பின் மீது தமிழர்கள் சந்தேகம் கொள்வது தவிர்க்க முடியாதது. அரசு இதை உணர்ந்துகொண்டு செயலாற்றுவது முக்கியம்.

## இயக்கக்காரர்...

விசுவலிங்கம் மணிவண்ணனும் இடைநடுவில் கூட்டத்திலிருந்து வெளியேறினர். அதன் பின்னர் தாம் இருவரும் இணைந்து கூட்டணியின் சின்னத்தில் தனித்துப் போட்டியிடப்போவதாக அறிவித்தனர்.
முன்னதாக இந்த ஊராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிடுவதிலை என்கிற முடிவைத் தமிழ் அரசுக் கட்சி எடுத்தது. மற்றைய இரு பங்காளிகளான புளொட் மற்றும் ரெலோ இணைந்தோ அல்லது புதிய கூட்டு அமைத்தோ போட்டியிடலாம் என்றும் ஆனால் கூட்டமைப்பு என்கிற பெயரைப் பயன்படுத்துவதில்லை என்றும் கூட்டமைப்பின் தலைவர்களது கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
அதைத் தொடர்ந்து நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி, தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான புளொட், செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈபிஆர்எல்எவ், சட்டத்தரணி சிறீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி, வேந்தன் தலைமையிலான ஜனநாயகப் போராளிகள் கட்சி, யாழ். மாநகர முன்னாள் மேயர் மணிவண்ணன் தலைமையிலான அரசியல் அணி ஆகியன ஒன்றிணைந்து புதிய கூட்டணியாக ஊராட்சித் தேர்தலை எதிர்கொள்வது குறித்துப் பேசின.
இது தொடர்பில் ஏற்கனவே இரண்டு மூன்று தடவைகள் சந்திப்புக்களை நடத்திய நிலையில் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ். ரில்கோ சொகுசு விடுதியில் இந்தக் கட்சிகளின் தலைவர்கள் மீண்டும் கூடி நீண்ட நேரம் பேசினர். இணக்கம் எட்டப்படாத நிலையில் பிற்பகல் 2.30 மணியளவில் நீதியரசர் விக்னேஸ்வரனும் மணிவண்ணனும் கூட்டத்திலிருந்து வெளியேறினர்.
எஞ்சிய கட்சித் தலைவர்கள் தொடர்ந்தும் கூட்டத்தை நடத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தனர். ஊராட்சித் தேர்தலை இணைந்து எதிர்கொள்வது என்கிற முடிவுக்குத் தாம் வந்திருக்கிறார்கள் என்று சித்தார்த்தன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். ஏனைய கட்சிகளின் தலைவர்களும் உடனிருந்தனர்.
"இது தொடர்பான முழுமையான விவரங்களை ஆராய்ந்த பின்னர் சனிக்கிழமை காலை 10 மணியளவில் எமது புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படும். அதன் பின்னர்தான் தெளிவாக எமது விடயங்களை எடுத்துரைப்போம்" என்றார் சித்தார்த்தன்.
இந்தப் புதிய கூட்டின் செய்தியாளர் சந்திப்பு நடந்து முடிந்த பின்னர் தனது வீட்டில் செய்தியாளர்களைச் சந்தித்த நீதியரசர் விக்னேஸ்வரன், எதிர்வரும் தேர்தலில் கட்சியின் மான் சின்னத்தில் போட்டியிடுவோம் என்று அறிவித்தார். அவருடன் மணிவண்ணனும் உடனிருந்தார்.

## அரகலயவினரும்...

இலங்கை சோசலிசக் கட்சியின் செயலாளர் மகிந்த டேவகே தெரிவித்தார் .
தமது கட்சி அரகலய செயற்பாட்டாளர்களுக்கு ஆதரவளித்து கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கொழும்பு அரகலயவுக்கே உரியது என்றும் அவர் கூறினார்.

## மீனவரை....

பெறுமதியான மீனிபிடி உபகரணங்களையும் தாம் இழந்தி ருப்பதாக வடபகுதி மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

**அதிகரிக்கும் அத்துமீறல்**
இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு நாட்டு அரசு களும் பேச்சு நடத்துகின்றன. மீனவர்கள் சங்கங்களுக்கு இடையிலும் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. ஆனால் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந் திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.
இலங்கைக் கடற்படையினர் அத்துமீறும் மீனவர்களை அவ்வப்போது கைது செய்து நீதிமன்றத்தின் முன்நிறுத்துவர். இரு நாட்டு உறவுகளின் அடிப்படையில் அத்துமீறிய மீன வர்கள் விடுவிக்கப்பட, அவர்களின் படகுகள் நீதிமன்றத் தால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன. எனினும் இந்த நடவடிக்கையும் அண்மைக் காலமாகக் கைவிடப்பட்டிருக் கின்றது என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். எல்லை தாண்டி வரும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற் படையினர் விரட்டுவதோ, கைது செய்வதோ கிடை யாது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

**கண்டனம் பேரணி**
இதனைக் கண்டித்து வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் குரு நகரைச் சேர்ந்த மீனவர்கள் போரணி நடத்தினர். குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் இந்தப் போராட் டத்தை ஏற்பாடு செய்திருந்தது. குருநகரில் இருந்த தொடங்கிய பேரணி, நீரியல் வளத் திணைக்களத்திற்குச் சென்றது. அங்கு கோரிக்கை மனு கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் 'சிறீதர் தியேட்டர்' அலுவலகத்திற்குச் சென்றது. அங்கு மீனவர் களின் மனுவைப் பெற்றுக்கொண்ட பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா உரையாற்றினார்.
அப்போது இந்த விடயத்தைப் பகிரங்கமாத்தான் சொல் கின்றேன் என்று தெரிவித்த அமைச்சர், இந்திய மீன வர்களைப் பிடிப்பதற்கும் அவர்களின் படகுகளை இடிப்பதற்கும் பெரிய இரும்புப் படகுகள் இரண்டு இந்த வாரமே குருநகர் மீனவர்களுக்குத் தரப்படும் என்று அறிவித்தார்.

**கொம்புசீவிய அமைச்சர்**
"எமது மீனவர்களின் பிரச்சினையை நான் அறிவேன். இந்தப் பிரச்சினை நீண்ட காலமாகவே இருக்கின்றது. கடற்படையினர் இடையிடையே இந்திய மீனவர்களைக் கைது செய்கிறார்கள். ஆனால் அது போதாது.
அவர்களிடம் பெரிய இரும்புப் படகுகள் இருக்கின்றன. எமது மீனவர்களிடம் சிறிய படகுகளே இருக்கின்றன. அவற்றால் இந்தியப் படகுகளை எதிர்க்க முடியாது. கைப்பற்றிய இந்தியப் படகுகள் இருக்கின்றன. அவற்றை எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப் போகிறேன். இந்திய மீனவர்களைப் பிடிப்பதற்கும் இடிப்பதற்கும் அந்தப் படகுகளில் இரண்டு மூன்றை உங்களுக்கும் தருகின்றேன்" அப்போது அங்கிருந்தவர்களில் ஒருவர் "இடிப்பதற்கு என்றால் தாருங்கள்" என்றார். உடனே அமைச்சர் "நான் சொன்னால் உங்களுக்குப் புரியும்தானே, இடிப்பதற்கும் பிடிப்பதற்கும்தான் இரு படகுகளைத் தருகின்றேன்" என்று தனது உள்நோக்கத்தைத் தெளிவுபடுத்தி குருநகர் மீனவர்களைக் கொம்புசீவி விட்டார்.
ஏற்கனவே பருத்தித்துறைக் கடலில் இவ்வாறு இரு தரப்பு மீனவர்களும் மோதிக்கொண்டதில் பலர் காயமடைந்தி ருக்கின்றனர். உள்ளூராட்சித் தேர்தல் நெருங்கும் சமயத் தில் அமைச்சர் இவ்வாறு யாழ்ப்பாண மீனவர்களைக் கொம்புசீவி விட்டு தமிழ்நாட்டு மீனவர்களுடன் மோதலை வளர்க்க முயற்சித்திருக்கிறார்.

**''கேடுகெட்ட அரசியல்வாதிகள்''**
கச்சதீவு அந்தோனியார் தேவாலயப் பெருநாள்களின் போது அங்கும் செல்லும் அமைச்சர் டக்ளஸ் இரு தரப்பு மீனவர் களையும் சந்தித்து அவர்களுக்கு மத்தியில் சமரச முயற்சி களில் ஈடுபடுபவராகத் தன்னைக் காட்டிக்கொள்பவர். இப்போது தேர்தல் நெருங்குகிறது என்பதால் கரையோரப் பகுதி வாக்குகளைச் சுருட்டிக்கொள்வதற்காக இவ்வாறு மீனவர்களைக் கொம்பு சீவி விடுகின்றார் என்று குற்றஞ் சாட்டினார் குருநகரைச் சேர்ந்த மீனவர் ஒருவர்.
இந்திய மீனவர்களால் நாம் கடுமையாகப் பாதிக்கப்படு கின்றோம் என்பது உண்மைதான். அதை இந்த அரசுகள் தான் பேசி தீர்த்து வைக்கவேண்டும். கடற்படை இருக்கின் றது. எல்லை தாண்டும் மீனவர்களைக் கட்டுப்படுத்துவதை விடுத்து அவர்களுக்கு இப்போது வேறு என்ன வேலை இருக்கிறது? அதையெல்லாம் செய்வதை விட்டுவிட்டு அப்பாவி மீனவர்களை மோதவிட்டு அரசியல் செய்யப் பார்க்கிறார்கள் இந்தக் கேடுகெட்டவர்கள் என்று அவர் மேலும் காறி உமிழ்ந்தார்.
கடற்றொழில் அமைச்சராக இருந்து இந்த விடயத்தை உரிய வகையில் தீர்க்க முடியவில்லை என்றார் அமைச்சர் டக்ளஸ் தனது பதவியை தூக்கி எறிந்துவிட்டுச் செல்ல வேண்டும், அதைவிடுத்து அப்பாவி மீனவர்களை மோத விட்டு அவர்களின் உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக் கக்கூடாது என்று கண்டித்தார் தேசிய மீனவர் இயக்கப் பிரதிநிதி ஒருவர்.

## முதலில்...

நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பின்னர் எடுக்கப் பட்டதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.
தமிழ் மக்கள் பல பிரச்சினைகளுக்குள் சிக்கி ஒவ்வொரு நாளையும் கழித்து வரும் நிலையில், அவர்களுக்கு அரசி யல் தீர்வைக்கூடத் தராத அரச தலைவர் எப்படி தேசிய பொங்கல் விழாவை யாழ்ப்பாணத்தில் கொண்டாட முடி யும் என்று அவர்கள் கேள்வி எழுப்பினர். காணாமலாக் கப்பட்டோர், அரசியல் கைதிகள், காணி விடுவிப்பு, படைத் துறை ஆக்கிரமிப்பு, பொளத்த மயமாக்கல் போன்ற அரசின் திட்டமிட்ட ஒடுக்குமுறைகள், பிரச்சினைகளுக்கு மத்தியில் பொங்கல் விழாவில் தமிழ் மக்களால் பங்கேற்க முடியாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
"தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை ழவங்கிய பின்னர் அரச தலைவர் பொங்கல் விழாவை முன்னெடுக் கட்டும். தமிழ் மக்களாக நாங்களும் அதில் இணைந்து கொள்வோம்" என்று மாணவர்கள் தெரிவித்தனர்.
தேசிய பொங்கல் விழா ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் சிவன் கோவிலில் இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.
விழாவிற்கு முன்னதாக பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து தமது பேரணி நல்லூரில் தேசிய பொங்கல் விழா இடம்பெறும் இடத்தை நோக்கிப் புறப்படும் என்று மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

# பொருளாதாரச் சிக்கலும் சிங்களவர்களின் புலம்பெயர்வும்

மருத்துவர்
சி. யமுனாநந்தா

இலங்கையின் பொருளாதார நெருக்கீட்டை முறையாக எதிர்கொள்ளாவிடின் அடுத்துவரும் 75 வருடங்களில் இனப்பரம்பலில் மாற்றங்கள் ஏற்படும். தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இலங்கையில் இருந்து பெருமளவில் மக்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்கின்றனர். இதில் துறை சார் நிபுணர்கள் முதல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் சாதாரண தொழிலாளிகள் வரை அதிக வருமானத்திற்காக நாட்டை விட்டு வெளியேறும் சூழல் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் தற்பொழுது புலம்பெயரும் மக்களை இனரீதியாகப் பார்க்கையில் தமிழர்கள் புலம்பெயரும் நிலைமாறிப் பெருமளவான சிங்களவர்கள் புலம்பெயரும் நிலைமை தோன்றியுள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்து 75 வருடங்களை அண்மிக்கும் இவ்வேளையில் கடந்தகாலங்களில் கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம் என்பவற்றில் விவசாயக் குடியேற்றங்களில் குடியமர்த்தப்பட்ட மக்களும் தமது வாழ்வாதாரத்திற்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இலங்கையில் உள்ள தமிழர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கெனவே புலம்பெயர்ந்திருக்கிற நிலையில் அவர்களுக்கு என உறுதியான சமூகத் தொடர்புகள் உண்டு. மேலும் இலங்கைத் தமிழர்களுக்குத் தமிழகத்துடனான கலாசார உறவும் பலமாக உள்ளது. இதனால் தமிழர்களின் மொழி, கலாச்சாரம் ஆகியன புலம்பெயர் நிலையிலும் உறுதியாக உள்ளன. மாறாகச் சிங்கள மக்கள் நாட்டைவிட்டுப் புலம்பெயரும் நிலையில் இலங்கையில் சிங்கள மக்களது சமூகப் பொருண்மிய மேன்மை பாதிக்கப்படும். புலம்பெயரும் சிங்கள மக்களும் இன்னும் 10 வருடங்களுக்கு மேல் வெளிநாடுகளில் கடுமையாக உழைக்க வேண்டிய சூழல் ஏற்படும்.

இந்நிலையில் அவர்களது இரண்டாம் சந்ததியினர் மீளவும் இலங்கைக்கு வர விளையமாட்டார்கள். இலங்கையிலுள்ள முஸ்லிம் மக்கள் இலங்கையிலே சிறப்பாக எத்தகைய தொழிலையும் செய்து தமது வாழ்வைச் சிறப்பாக மேற்கொள்கின்றனர். சாதாரணமாகவே குடிப்பரம்பல் வீதத்தினை அதிகமான அதிகரிப்பைக் கொண்ட மக்கள் முஸ்லிம் மக்களேயாவர். இந்நிலையில் இன்னும் 50 வருடங்களில் முஸ்லிம்களே சனத்தொகை அதிகமுள்ள சமூகமாக மாறுவார்கள்.

தமிழ்மொழியும் தமிழ்ப் பாரம்பரியமும் வட இலங்கையும் தமிழகமும் தொடர்பில் இருப்பதனால் மாற்ற



**“ தற்போதைய பொருளாதார தாழ்வு நிலையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு தவறிவிட்டால் சிங்கள மக்களின் எதிர்காலம் இலங்கையில் இல்லாது போகும் ”**

# வட்டவல நிறுவனத்தின் பாராட்டுக்குரிய முயற்சி...!

**தேனுஜா**

வட்டவல தேயிலை உற்பத்தி நிறுவனமானது கத்தரி, மிளகாய், கீரை, பயற்றை, தக்காளி எனப் பல்வேறு விதைகளை ஒரு பொலித்தீன் பையில் பொதி செய்து அதைத் தனது தேயிலைப் பையுடன் இணைத்து விற்பனைக்கு விட்டிருக்கிறது. வழமையாகத் தனது தேயிலைப் பைக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே அவற்றை விநியோகிப்பதால் கிட்டத்தட்ட இலவசம் என்ற நிலையில் விதைப் பைகளைத் தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி நிற்கிறது.

**இதன் மூலம் சிறுவர்கள், மாணவர்களுக்கு வீட்டுத் தோட்டம் குறித்த அதிக விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.**

பல்தேசிய மற்றும் நடுத்தர, சிறிய நிறுவனங்கள் விளம்பரங்களுக்கு அதிகம் செலவு செய்து வாடிக்கையாளர்களைச் சம்பாதிப்பதில் கரிசனை செலுத்திவரும் தற்காலத்தில் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பயன்தரக்கூடிய இதேபோன்ற விதைகள் வழங்கும் செயற்றிட்டத்தை ஏனைய நிறுவனங்களும் முன்னெடுப்பதற்கு வட்டவல நல்ல முன்னுதாரணம்.

விதைகள் வழங்கும் இந்தச் செயற்றிட்டம் மூலம் எதிர்பாக்கும் அளவுக்கு முழுமையான பயன் கிடைக்காவிட்டாலும் வீட்டுத் தோட்டம் என்ற அளவில் தனி



நபர்கள் பொழுதுபோக்காகவேணும் காய்கறிகளை நாட்டிப் பராமரிக்க வாய்ப்புண்டு. இதன் மூலம் சிறுவர்கள், மாணவர்களுக்கு வீட்டுத் தோட்டம் குறித்த அதிக விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். கன்றுகளை நாட்டித், தண்ணீர் ஊற்றிப் பராமரித்து அவற்றின் விளைச்சல்களை அறுவடை செய்யும் ஆர்வத்தையும் ஏற்படுத்த முடியும்.

மடையாது பேணப்படும். ஆனால் சிங்கள மொழியும் பௌத்த பாரம்பரியமும் அடுத்த 75 வருடங்களுக்குப் பின்னர் தென்னிலங்கையில் இல்லாது போகும் சூழலையே தற்போதைய பொருளாதார தாழ்நிலை இனம்சார் புலம்பெயர்வு ஏற்படுத்தி உள்ளது.

இலங்கையின் 75வது சுதந்திர தினத்தினை யாழ்ப்பாணத்தில் தேசிய விழாவாகக் கொண்டாடும் நிகழ்வானது எதிர்காலத்தில் மங்கும் தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவத்தினைக் கட்டியம் கூறும் நிகழ்வாகக் கருதலாம். அடுத்த 75 வருடத்தில் வட இலங்கை சேது இராஜ்ஜியத்தின் பகுதியாக பொருளாதாரத்தில் மேன்மை உறும்.

எனவே தற்போதைய பொருளாதார தாழ்வு நிலையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு தவறிவிட்டால் சிங்கள மக்களின் எதிர்காலம் இலங்கையில் இல்லாது போகும் சிறந்த பொருளியல் நுட்பமாக சமவுடமை பொருளாதாரத்தை தற்போது அறிமுகப்படுத்தல் அவசியம். திரவப்பண ஓட்டத்தினை வங்கிகளில் மட்டுப்படுத்தப்படல் வேண்டும். அனைவரும் கட்டாயக் கடமைக்குச் செல்லல் அவசியம். வெளிநாடுகளுக்குச் செல்லல் கட்டுப்படுத்தல் அவசியம். வேதனம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படல் அவசியம். உணவுப் பொருட்கள் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படல் வேண்டும். விவசாயம், மீன்பிடி, சிறு கைத்தொழில்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படல் வேண்டும். இவ்வாறு திட்டமிட்டாலேயே பொருளாதாரத் தாழ்நிலையிலிருந்து மீளலாம்.

வட்டவல தேயிலை உற்பத்தி நிறுவனத்துக்கு இந்தப் புதிய முயற்சிக்காக பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் நாம் பின்னிற்கத் தேவையில்லை. எப்படியிருப்பினும் வட்டவல என்பது வர்த்தக - வியாபார நிறுவனம்தான். அது தனது வர்த்தகத்தை மேம்படுத்தும் திட்டங்களில் ஒன்றாகவே இந்தச் சூட்சுமத்தைச் செய்கிறது என்று சொன்னாலும்கூட பொருளாதார நெருக்கடிக் காலத்தில் பொருள்களின் விலைகள் சடுதியாக உயர்ந்துசெல்லும் இந்தக் காலகட்டத்தில் இலவசமாக விதைகளை வழங்கும் அதன் முயற்சி பாராட்டுக்குரியதே.

"இது 'வாவன்னா' தோட்டக்கலைக் கருத்தாக்கம். எதிர்கால உணவு நெருக்கடிக்குத் தீர்வாக, சாத்தியமான ஒவ்வொரு நிலத்திலும் பயிர்களை வளர்த்து உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் தோட்டக்கலையை பலரின் அன்றாட வழக்கமாக மாற்ற வேண்டும். தமக்குத் தேவையான பயிர்களைத் தாங்களே வளர்த்துக் கொள்வதன் மூலம் குடும்பத்தின் ஊட்டச்சத்துத் தேவைகளையும் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும்.புதிய பயிர்களை அறுவடை செய்வது மட்டுமல்லாமல், விசமில்லாத அறுவடையையும் பெறலாம். அத்தோடு இந்த வேலை உடற்பயிற்சியை வழங்கும். தினமும் சில மணிநேரம் தோட்ட வேலைகளில் ஈடுபடுவதால் உடலில் தேவையில்லாத கலோரிகள் எரிக்கப்படுவதால் நல்ல உடல் தகுதிக்கும் வழிவகுக்கும். ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு வழிவகுக்கும். உணவுக்காக செலவழித்த பணத்தை கணிசமான அளவு சேமிக்கவும் முடியும். எல்லா வற்றையும்விட உடல் மற்றும் மன ஆரோக்கியத்துக்குத் தோட்டம் ஒரு நல்ல செயலாகும். நாம் விதைத்த பயிர்களின் அறுவடையை சொந்தக் கைகளால் தொட்டுப் பார்ப்பதும், உட்கொள்வதும் அதிக மனநிறைவைத் தரும்" - என்பது வட்டவல வலைப்பக்கத்தில் உள்ள கருத்து.

# தனித்துப் போட்டியிடுவதுதான் தகுந்த அறுவடையைத் தரும்...!



**நியூட்டன்**

உள்ளூரட்சி சபைத் தேர்தலுக்குக் கட்டியம் கூறப்பட்டு வரும் நிலையில் அதை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளில் கட்சிகளும், தலைவர்களும் இறங்கிவிட்டனர். தேர்தலையொட்டி அரசியல் புலத்தில் சல சலப்பு ஏற்படத் தொடங்கியிருக்கிறது. போருக்கு முன்பும் பின்புமாக இதுவரை காலமும் தேர்தல்களில் கூட்டாகக் களமிறங்கிய தமிழ் அரசுக் கட்சி எதிர்வரும் தேர்தலில் தனித்துக் களமிறங்கப்போவதாகத் தெரிகிறது.

போருக்குப் பின்பான காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அரசியலில் பலமிழந்து வரும் தமிழ் அரசுக் கட்சி எதிர்வரும் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதால் கிடைக்கப்போகும் மக்கள் தீர்ப்பானது போருக்குப் பின்பு தமிழ் அரசுக் கட்சி முன்னெடுத்த - முன்னெடுக்காத அரசியல் செயற்பாடுகளால் விளைந்த அறுவடையாகவே இருக்கும்.

தனித்துப் போட்டியிடும் தமிழ் அரசுக் கட்சியின் செயல் தற்கொலைக்கு ஒப்பானது, அது அந்தக் கட்சியைத் தேர்தலில் மண் கௌவச் செய்யும் என்றெல்லாம் பொது வெளியிலிருந்து கருத்துகள் வெளிவரத்தொடங்கியிருக்கின்றன. பொதுவெளியினருக்கு மாத்திரமல்ல தமிழ் அரசுக் கட்சியினருக்குக்கூட இது விசப் பரீட்சை என்று தெரியாமலிருக்காது. ஆகவே இதில் ஏதாவது "உள்குத்து" இருக்கலாம் என்றும் கதைகள் உலாவுகின்றன.

**புலிகளின் காலத்தில் அமோக வெற்றிகள்**

2001ஆம் ஆண்டு மார்கழி 5ஆம் நாள் நடந்த தேர்தலில் போட்டியிடுவதற்காகப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சம்மதத்துடன் கட்சிகளின் ஒருங்கிணைப்பானது சாத்தியமாக்கப்பட்டது. அனைத்துத் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் புலிகள் பேசினர். கூட்டமைப்பு என்று அது அழைக்கப்பட்டலாயிற்று. ஏற்கனவே கூட்டணி என்றொரு பெயர் இருந்ததால் புதிதாகத் தெரிவதற்காக கூட்மைப்பு என்கிற பெயர் தெரிந்தெடுக்கப்பட்டது.

இது ஒரு தேர்தல் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டதே தவிர அனைத்துக் கட்சிகளையும் இணைத்த ஒரு கட்சியாகப் பதிவு செய்யப்படவில்லை. புலிகள் இருந்தபோது 2001 தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் அ.சந்திரநேரு, மட்டக்களப்பில்; இ.கிருஷ்ணபிள்ளை (வெள்ளிமலை), ஜோசப்பரராஜசிங்கம், த.தங்கவடிவேல், யாழ்ப்பாணத்தில் ஆனந்தசங்கரி கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நடராசா ரவிராஜ், மாவை சேனாதிராசா, சிவாஜிலிங்கம்,

அப்பாத்துரை விநாயகமூர்த்தி, திருகோணமலையில் சம்பந்தன், வன்னி மாவட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், ராச குகனேஸ்வரன், உ.சிவசேகரம் ஆகியோர் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவானார்கள்.

இதன் பின்னர் 2004 சித்திரை 2ஆம் நாள் நடந்த பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் க.பத்மநாதன், தோமஸ் தங்கத்துரை வில்லியம், ஆகியோரும் மட்டக்களப்பில் கே.ஜெயானந்த மூர்த்தி, த.கனகசபை, தங்கேஸ்வரி, கதிராமன், கிங்ஸ்லி ராஜரட்ணம் ஆகியோரும் (2004இல் கிங்ஸ்லி விலகியதால் அந்த வெற்றிடத்துக்கு பா.அரியநேந்திரன் தெரிவானார்) யாழ்ப்பாணத்தில் செல்வராசா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ்பிரேமச்சந்திரன், ரவிராஜ் (இவர் 2006இல் கொல்லப்பட்டதால் 2004 தேர்தலில் தோற்ற மாவை சேனாதிராசா அந்த இடத்தை நிரப்ப நாடாளுமன்றம் சென்றார்), சிவாஜிலிங்கம், சி.சிவனேசன், பத்மினி சிதம்பரநாதன், சிறிகாந்தா (2006இல் இவர் விலக செலமன் சிறில் அந்த இடத்துக்காக நாடாளுமன்றம் சென்றார்) திருகோணமலை மாவட்டத்தில் சம்பந்தன், துரை ரட்ணசிங்கம், வன்னி மாவட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், கனகரட்ணம், சிவநாதன் கிஷோர், வினோநோகராதலிங்கம், ஆகியோருடன் தேசியப் பட்டியலில் ஈழவேந்தன் என எல்லாமாக 22 பேர் வடக்குக் கிழக்கிலிருந்து கூட்ட மைப்பு சார்பில் வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்கள்.

**புலிகள் இல்லாத காலத்தில் படுதோல்விகள்**

போர் முடிந்த 2009க்குப் பின்னர் 2010 சித்திரையில் நடந்த



**“2001, 2004 தேர்தல்களில் புலிகள் கூறியதை கேட்டுச் செயற்பட்ட சம்பந்தன் 2010இல் கூட்டமைப்பை பிரபாகரன் உருவாக்கவில்லை நானே உருவாக்கினேன் என்றார்.”**

பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் பியசேன யாழ். மாவட்டத்தில் ஈ.சரவணபவன், சிறிதரன், ஆகியோர், தேசியப் பட்டியல் உறுப்பினராகச் சுமந்திரனும் கூட்டமைப்புக்குள் புதிதாக உள்வாங்கப்பட்டார்கள். இந்தத் தேர்தலில் புலிகளுக்கு நேர் எதிரான ஐ.தே. கவுடன் கூட்டுச்சேர்ந்து போரை வழிநடத்திய சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு அரச தலைவருக்கான தேர்தலில் தமிழ் மக்களைக் கேட்டது கூட்டமைப்பு.

2001, 2004 தேர்தல்களில் புலிகள் கூறியதை கேட்டுச் செயற்பட்ட சம்பந்தன் 2010இல் கூட்டமைப்பை பிரபாகரன் உருவாக்கவில்லை நானே உருவாக்கினேன் என்றார். 2009க்கு முன்பெல்லாம் புலிகளுக்குப் பின்னால் நடந்து சென்ற சம்பந்தன், புலிகளின் காலத்தில் 2 தேர்தல்களில் வெற்றிபெற்ற சம்பந்தன் புலிகளில்லாத காலத்தில் தனது அரசியலை மாற்றியமைத்தார்.

இந்த அணுகுமுறைக்கூடாக 2018 உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இரண்டு சபைகளை மாத்திரமே கைப்பற்ற முடிந்தது. 2020 தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர், செயலர், முக்கிய தலைவர்களை மக்கள் நிராகரித்தனர். வடக்கு கிழக்கில் வெறும் 6 பேர் மாத்திரமே நாடாளுமன்றத் தேர்தலில் வென்றார்கள். அவர்களும் அரும்பொட்டிலேயே வெற்றி பெற்றனர். நிலமை இவ்வாறிருக்க எதிர்வரும் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி தனித்துக் களமிறங்கவிருக்கிறது.

**தனி வழி நன்மை**

தமிழ் அரசுக் கட்சி தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாக எடுத்த முடிவு மக்களைப் பொறுத்தவரை சரியானதே. இதன் மூலம் தமிழ் அரசு கட்சிக்கு எந்தளவில் மக்கள் ஆதரவு உள்ளது என்பதைப் பரீட்சிக்க முடியும். இறுதியாக நடந்த தேர்தலில் வெறும் 6 உறுப்பினர்களை மட்டும் பெற்றுக்கொண்டு (அதிலும் 3 ரெலோ, 1 புளொட்) ஏகப் பிரதிநிதிகள் என்ற பட்டத்தைச் சுமையாகச் சுமக்கும் நிலையில் தனியாகக் களத்தில் குதிப்பது என்பது (பின்னர் கூட்டுச் சேரும் தந்திரங்கள் எவையும் இல்லாவிட்டால்) மக்களுக்கு எதிர்கால விடிவையே வழங்கும் என்பதில் ஐயமில்லை.

# "நிர்வாணமாக்கிவிட்டு நிர்வாணப் பெண்களைப் பார்க்க விடுவார்கள்"



91

சிறைக்குள்...

தர்மராசா

விசாரணைகளின் போதான சித்திரவதைகள் வகை தொகையற்றன. அவற்றில் புத்தாக்கங்களுக்கு எப்போதும் இடமிருப்பதுண்டு.

ஒரு கையைத் தோளுக்கு மேலாலும் மறு கையை இடுப்புப் புறத்தாலும் முதுகுப் புறமாக எடுத்து இரண்டு கைகளிலும் விலங்கு பூட்டிவிட்டு நிர்வாண மாக நிற்கவிட்டுக் கண்களைத் துணியால் கட்டுவார்கள். அந்தத் துணிக்குள்ளால் வெளியில் நடப்பவற்றை நன்றாகப் பார்க்க முடியும். எதிரில் உள்ள அறையில் பெண் காவலர்கள் தமது உடைகளை மாற்றுவார்கள். அவர்களும் அப்போது ஏறத்தாழ நிர்வாணமாகக் காட்சி கொடுப்பார்கள். அப்போது சில பெண் காவலர் கள் தமது உள்ளாடைகளைக் கழற்றி வந்து முகத்தில் வைப்பதும் ஆண்குறி களைத் தட்டிக் கேவலப்படுத்துவதும் நடக்கும். இது போராளிகளைப் போராட் டச் சிந்தனையிலிருந்து மாற்றும் செயற்பாடாகவும் கடைப்பிடிக்கப்பட்டது.

"பிளானகா" என்பது பிளாஸ்ரிக் குழாய்க்குள் சீமெந்து, மண் ஆகியவற்றை நிரப்பி அதனால் அடிப்பது. அவ்வாறு அடித்தால் வெளிக்காயம் இருக்காது ஆனால், உள்ளே தசைகள் கண்டிவிடும். இவற்றைவிட வயர்கள், நைலோன், கயிறுகள், குதிரையின் பதப்படுத்தப்பட்ட ஆணுறுப்பு ஆகியவற்றையும் அடிப்பதற்குப் பயன்படுத்துவார்கள்.

என்னுடன் பூசாவிலிருந்த அருள் என்பவர் கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையத்தில் மேசையில் கிடத்தப்பட்டு பெரிய கட்டையால் கண்டபடி அடிக் கப்பட்டிருந்தார். அதை நேரில் கண்ட இன்னோர் கைதி, "அட மனுசனுக்கு இப்பிடியும் அடிக்கிறதா? கடவுளே அவன் செத்துவிடக்கூடாது" என்று பிரார்த் தித்தார்.

கைதிகளைக் குப்புறக் கிடத்திவிட்டு குதத்துக்குள் வயர் வைத்து வயரின் முனையில் புனல் வைத்துப் பெற்றோல் ஊற்றுவார்கள். வயிறு எரிந்துகொண்டு அந்தப் பெற்றோல் செல்வதை அனுபவித்தேன் என்று அருள் கூறினார். அது விவரிக்க முடியாத துன்பம் என்றும் கூறினார்.

**ரெலிபோன் சித்திரவதை**

இரண்டு காதுகளுக்குள்ளும் பென்சில், பேனா, ஆணி ஆகிய கூரிய

# இறந்தவர்களின் சாம்பலைச் செல் பெட்டிகளில் சேமித்தோம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

காலியைச் சேர்ந்தவரான சனத் கருணாரத்ன என்பவர் 1991ஆம் ஆண்டு ஆனையிறவுப் படை முகாமுக்குப் பொறுப்பாக இருந்தவர். அந்தக் காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அந்த முகாமைத் தாக்கிக் கைப்பற்ற முற்பட்டனர். எனினும் அந்த முயற்சி தோல்வியடைந்தது. அது குறித்த விவரங்களை அவர் வெனச யூரியூப் தளத்தில் பகிர்ந்திருந்தார். கடந்த மூன்று வாரங்களாக வெளியாகி வந்த அந்த தொடரின் நான்காவது பாகம் இந்த வாரம்.

புலிகளின் தாக்குதல் காரணமாக முகாமுக்குள் இறந்த சிப்பாய்களின் உடலத்தை உலங்கு வானூர்தியில் ஏற்றிப் பலாலிக்கு அனுப்ப முடியாத சூழல் காணப்பட்டது. எனவே சிப்பாய்களின் சடலங்களை முகாமுக்குள்ளேயே எரித்து அவர்களின் சாம்பல்களைச் செல் பெட்டிகளுக்குள் போட்டு இறந்தவரின் பெயர், முகவரி, பதவி என அடையாளப்படுத்தக்கூடியவற்றை எழுதி வைத்தோம். சடலங்களை எரிப்பதற்கு விறகு, எரிவாயு என எதுவும் இல்லாது சிரமப்பட்டோம்.

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

காங்கேசன்துறையிலிருந்து கடற்படைக் கப்பல் மூலம் துருப்புகளை ஏற்றி வந்து வெற்றிலைக்கேணி - முள்ளியான் கடற்கரையில் படைத் தரப்பினர் தரையிறக்கினார்கள். இந்தச் சூழலில் புலிகள் ஆனையிறவு முகாமை முற்று கையிட்டு அதைக் கைப்பற்றும் அளவுக்கு நிலமை வந்திருந்தது. "நீங்கள் யாரும் தப்ப முடியாது உடனடியாகச் சரணடையுங்கள் சரணடைந்தால் ஐசி.ஆர்.சி. மூலம் பத்திரமாக உங்களின் குடும்பத்தினருடன் ஒப்படைப்போம்" என்று ஒலிபெருக்கி மூலம் புலிகள் தொடர்ச்சியாகக் கூறிக் கொண்டேயிருந்தார்கள். ஆனால், படையினரில் எவரும் சரணடையவில்லை.

நில அளவைத் திணைக்களத்துக்குச் சொந்தமான ஒரு வானூர்தியைப் பயன்படுத்திப் படையினர் தாக்குதல் நடக்கும் இடங்களைப் படம் பிடித்தனர். அது புலிகளின் நகர்வுகளைக் காட்டியது. பின்னர் புலனாய்வுத் தகவல்கள் மூலம் படத்தில் கிடைக்கும் விடயங்களை உறுதிப்படுத்தினோம்.

பொருள்களை வைத்து அடிப்பதே இந்த வதை. 1999 காலகட்டத்தில் காதுகளுக்குள் ஒரே நேரத்தில் பேனாக்கள் செருகப்பட்டு ஜே.வி.பி. இளைஞர் போராளிகள் பலர் கொல்லப்பட்டனர் என்று பரவலான செய்திகள் அடிபட்டன. இந்தச் சித்திரவதைகளுக்குப் பெயர்போனவராக ஒரு காவல் அதிகாரி இருந்தார் என்று தெரிவிக்கப்படுவதுண்டு.

பிளாஸ்ரிக் குழாய் ஒன்றைக் குதத்துக்குள் திணித்து அதனுடாக முள் கம்பியை விட்டுப் பின்னர் குழாயை வெளியே எடுத்துவிட்டு முள் கம்பி தசைக்குள் சிக்க வைப்பார்கள். அந்தக் கம்பியைச் சுற்றும்போது குதத்துக்குள் தசை, குடல் கிளிக்கப்பட்டுக் குருதி போவதுடன் தாங்க முடியாத வேதனைகளையும் ஏற்படுத்தும். இந்தச் சித்திரவதையால் பாதிக்கப்பட்ட ஒருவர் களுத்துறைச் சிறையிலிருந்து விடுதலையாகிப் போய் அந்த வேதனை தாங்க முடியாமல் உயிர்மாய்த்துக் கொண்டார்.

மன்னார் சி.எஸ்.யு. இனால் கைது செய்யப்பட்ட கந்தையா என்பவர் தனக்கு நடந்த சித்திரவதை பற்றி இவ்வாறு கூறினார், "ஒரு மேசையில் மல்லாக்காய்ப் படுக்க வைத்துக் கை, கால்களை மேசையுடன் கட்டினார்கள். மிளகாய்த் தூளைத் தண்ணீரில் கரைத்து வாய், மூக்கு, கண்களுக்குள் ஊற்றினார்கள். இரவு ஊற்றிவிட்டு விடியும் வரை அப்படியே விட்டுவிட்டனர். மறுநாள் காலை ஒருவர் வந்து சிறைக் கூட்டுக்கு வெளியே எடுத்துக் கைகளைப் பின்னால் தள்ளிச் சிறைக் கம்பிகளுக்கூடாக கைகளில் விலங்கு பூட்டினார். 4 சிகரெட்டுக்களைப் பற்ற வைத்தார். அவற்றில் இரண்டைக் காதுகளிலும் மற்றைய இரண்டை மூக்குத் துவாரங்களிலும் செருகிவிட்டு கீழே விழுத்தினால் அடிப்பேன் என்று விட்டுத் தூரவாகப் போய் இருந்து அவதானித்தார். சிகரெட்டுக்கள் புகைந்து முடிந்து அடிக்கட்டைக்கு அருகில் தணல் வந்தபோது சூடும் புகையும் சேர்ந்து மிகக் கொடுமையான வேதனையாக இருந்தது" - என்றார். (தொடரும்)




தொற்று நீக்கிவிட்டு மயக்க மருந்து கொடுக்காமலே சிப்பாய் துடிக்கத் துடிக்க அவரது காலை வெட்டினோம். அவர் இப்போதும் உயிருடன் உள்ளார்.

இந்த ஆனையிறவு முகாம் முற்றுகைத் தாக்குதலில் படையினரில் 32 பேர் சாவடைந்தார்கள். அதிகம்பேர் காயப் பட்டார்கள். அவர்களை ட்ராக்ரரில் ஏற்றிக் கடற்படைக் கப்பல் மூலம் புல் மோட்டைக்குக் கொண்டு சென்று பின் னர் நோயாளர் காவு வண்டி மூலம் அனுராதபுரத்துக்கும் கொழும்புக்கும் அனுப்பினோம். 1991 ஜூலை 28இல் ஆனையிறவு முற்றுகையை முறியடித் தோம். ஆனையிறவு படை முகாமைத் தக்க வைத்ததற்காக எனக்குப் பரண வீர விபூஷண பட்டம் வழங்கி மதிப்ப ளித்தார்கள்.

**ஜெனரல் கொப்பேகடுவ உதவி**

மேலதிக துருப்புகளை இறக்கிவிட்டு இரவு 11 மணிக் குத் தாக்குதலை தொடக்கவுள்ளதாக ஜெனரல் கொப்பே கடுவ கூறினார். நான் அவரை அங்கு இறங்கவேண்டாம் என்று கூறினேன். கடற்படையில் பணிபுரிந்த ஹமீட், ஹபூர், பாபா ஆகியோர் புலிகளின் தகவல்களை ஒட்டுக் கேட்டு அவற்றை உரியநேரத்தில் படையினருக்கு வழங் கினார்கள். மேலதிக துருப்புகள் முகாமை அடைவதற்கு முன்னர் புலிகளின் மோட்டார் தாக்குதலால் சிப்பாய் ஒரு வர் ஒரு காலில் காயப்பட்டார். அந்தச் சிப்பாய்க்கு மருத் துவம் செய்வதில் சிரமம் இருந்தது. அவரது காலை சிதைந்த இடத்துடன் வெட்டினால் அவரை உயிர் பிழை க்க வைக்கலாம் என்று மருத்துவப் பிரிவினர் கூறினர். இரும்பு அறுக்கும் வாள்பிளேற்றை நெருப்பில் சூடாக்கித்



## இந்த வாரச் சொல்

## மிதந்து

யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கில் "மிதந்து" என்கிற சொல் பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுகிறது. ஓர் ஒழுங்கிலிருந்து விலகி துருத்திக்கொண்டு காணப்படும் சந்தர்ப்பங்களிலும், திரவ நிலைகளில் (நீர், எண்ணெய்) கலப்படமாக அல்லது புதிதாக வேறோர் பதார்த்தம் அல்லது திரவத் தன்மை கலப்புற்றிருக்கும் சந்தர்ப்பங்களிலும் , திரவ நிலைகளில் திரவத்தைவிடக் கனதி குறைந்த பொருள்கள் மேல் மட்டத்தில் காணப்படும் சந்தர்ப்பங்களிலும் இந்த மிதந்து என்கிற சொல்லாடல் கையாளப்படுகிறது.

"அவளுக்குப் பல்லு மிதந்து போச்சுது", "வீட்டுக்கூரை வளைந்து மிதந்துபோய் கிடக்கு" என்பவற்றில் ஓர் ஒழுங்கிலிருந்து விலகி மேல் நோக்கி நகர்ந்துவிட்டமை சுட்டிக்காட்டப் படுகிறது.


"கடலில் நுரையாக ஏதோ மிதந்துகொண்டிருக்கிறது", "தேத்தண்ணிக்குள்ள எதோ மிதக் குது", "கறியில எண்ணெய் பேர்ந்து மிதக்குது", "எண்ணெய்க்குள்ள எதையோ கலந்து போட் டாங்கள் அது மிதக்குது", "ஒருத்தற்ற பிணம் குளத்துக்குள்ள மிதக்குது", "மீன்கள் செத்து மிதக் குது", "நெல்லை வாளிக்க போட்டுத் தண்ணிய ஊற்றினால் சப்பி மிதக்கும்" என்பவை யெல் லாம் திரவ நிலைகளுக்கு மேல் மட்டத்தில் வெவ்வேறு பொருள்கள் காணப்படுவதைக் குறிக்கின்றன.

# இணைப்பாட்சி என்கிற சமஷ்டி!

07

மு.திருநாவுக்கரசு

"சமஷ்டியா தனிநாடா" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் நவீன வரலாற்றுத்துறை விரிவுரையாளரான மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்ட நூல் இன்றைய காலகட்ட விவாதங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும். 2004ஆம் ஆண்டு வெளியாகிய இந்த நூல் சமஷ்டி - தோற்றமும் வளர்ச்சியும், சமஷ்டி - ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும், சமஷ்டி யாப்புகள் - அமெரிக்க சுவிஸ் அனுபவங்கள், இலங்கையில் சமஷ்டிக் கொள்கை ஆகிய அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 234 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2009ஆம் ஆண்டு அறிவு அமுது பதிப் பகத்தால் கிளிநொச் சியில் வெளியிடப் பட்டது. தீர்வு பற்றிய பேச்சுக்கள், கலந்து ரையாடல்கள் இடம் பெறும் இந்தக் காலத்தில் அதன் ஐந்தாம் அத்தி யாயத்தைச் செம்மண் ணில் வாசிக்கத் தருகிறோம்.




## இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கை

1956ஆம் ஆண்டுத் தனிச் சிங்களச் சட்டம், 1958ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தம் ஒரு தலைப்பட்சமாகக் கிழித்தெறியப்பட்டமை, 1958ஆம் ஆண்டு இன ஒழிப்பு வன் செயல் என்பனவற்றையெல்லாம் வைத்துப் பார்க் கும்போது சிங்கள-தமிழ் உறவு ஒட்ட முடியாத திசைகளை நோக்கிப் பிரிந்து விட்டது தெளிவாகத் தெரிந்தது. இதில் சிங்கள அரசியல் தட்டுத்தடு மாற்றமற்ற வகையில் தமிழின எதிர்ப்பு எனும் ஒரு வழிப்பாதை அரசியலுக்குப் போய் விட்டது. ஆனால், தமிழ் அரசுக் கட்சியின் இரண்டக நிலை காரணமாக அது தட்டுத்தடுமாறி சிங்கள அரசியலுடன் இழுவுண்டு தேய்ந்து சென்றது.

1950களின் மத்தியைத் தொடர்ந்த காலப்பகுதி தென்னாசியாவின் தேசியப் பிரச்சினைகள் கூர்மையடைந்த காலம். தமிழரைப் பொறுத்தவரை ஒரு சாதக மான புறநிலை யதார்த்தம் இருந்தது. ஆனால், தமிழ் அரசுக் கட்சி அப்படியான ஒரு நிலையை கையாளத் தவறியது. 1950களின் மத்தியில், தக்க காலத்தில் வெட்டொன்று துண்டுரெண்டாய் முடிவெடுக்கத் தவறியமையானது பிற்காலத் தில் தமிழ் மக்கள் பெரும் விலைகொடுக்க வழிவகுத்தது.

தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடு இவ்வாறு அமைந்திருக்கையில் இந்தக் கால கட்டத்தில் தீர்க்கமான பாத்திம் வகித்த பண்டாரநாயக்காவின் அரசியல் செயற்பாடுகளை இங்கு சரிவர எடைபோடவேண்டியது அவசியம்.

மொழிப் பிரச்சினை சம்பந்தமாகவும், தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக

# உண்டி சுருங்குதல்

அன்று உண்டி சுருங்குதல்
பெண்டிற்கு அழகு என்றார்கள் - இன்று
அதுவே எல்லார்க்கும் அழகு
என்று அரசு பணிக்கிறது - ஆம்
நான்கு பேருக்கு
இரண்டு றாத்தல் பாண்
வாங்கிய காலம் போய் - இன்று
ஒரு றாத்தல் பாணில் எல்லோரும்

இது ஒருசோறு பதம்...
சரியாகக் கவனிக்க முடியாததால்
பெற்றோரை முதியோர் இல்லத்தில்
சேர்த்த காலம் போய்
நிறைவாகக் கவனிக்க முடியாது
பிள்ளைகளை அனாதை ஆச்சிரமத்தில்
சேர்த்துவிட்டு அழும் பெற்றோர்

இது எங்கு நடக்கிறது
எத்தியோப்பியாவிலா...? சோமாலியாவிலா...?
வேறு ஆபிரிக்க நாட்டிலா...?
இல்லை எம் நாட்டிலேயே
இந்த இழிநிலை!
"அழகிய நாடாம்" என்று
விதந்துரைக்கப்பட்டது - இன்று
அழுகிய நாடாய் மாறியதேன்!

இனக்குரோதங்களையே மூலதனமாக
இடித்துரைத்து இடித்துரைத்து - வளர்த்த
அரசியலின் தீர்க்கதரிசனமில்லாத
படாடோப வாழ்வும் திட்டமின்மையும்
அதல பாதாளத்தில் எம்மை...!
பணவீக்கமும் மன வீக்கமும் - இங்கு
காலங்கடந்த கதையாய் போச்சு
பட்டினிச் சாவுகள்
பத்திரிகைகளில் தொடர்கதையாய்...

மூச்சுக்குப் பங்கம் வந்தாச்சு
சேடமிழுக்கிறது அரசு - ஆனாலும்
சோடித்து மெழுகுகிறது...
இரண்டு வருடத்தில் சமநிலைக்கு...
இல்லையில்லை ஐந்து வருடத்தில்
முந்தைய நிலைக்கு வந்துவிடுமாம் - அதற்குள்
எத்தனைபேர் மிஞ்சுவர்
ஓ... உண்டி சுருங்குதல்...



**வட அல்வை மகேஸ்**

வும் பண்டாரநாயக்காவிடம தொடக்கத்தில் முற்போக்கானதும் அறிவியல்பூர்வமாகச் சரியானதுமான நிலைப்பாடுகள் இருந்துள்ளமை உண்மைதான். ஆனால், பண்டாரநாயக்காவின் அடிமன அபிலாசைகளிலிருந்தும், அவரது செயல்கள் அனைத்தினதும் மொத்தத் திரட்சியில் இருந்தும், இவையனைத்தினாலும் ஏற்பட்ட விளைவுகளில் இருந்தும் பார்க்கும்போது சாராம்சத்தில் அவர் ஒரு பிற்போக்குவாதியாகவே தெரிகின்றார்.

அதாவது ஐரோப்பிய ஓரின நாடுகளுக்குப் பொருந்தும் ஒற்றையாட்சி முறை பல்லின நாடுகளுக்குப் பொருந்தாதென்றும், பல்லினச் சமூகங்களுக்குச் சமஷ்டிமுறைதான் சிறந்த தீர்வென்றும் 1920களின் நடுப்பகுதியில் கருத்துக்களை மிகவும் அறிவுபூர்வமாக முன்வைத்திருந்த பண்டாரநாயக்கா 1944ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால் முன்மொழியப்பட்ட தனிச் சிங்களத் தீர்மானத்திற்கான பிரேரனைமீது விவாதிக்கையில் சுவிற்சர்லாந்தில் நடைமுறையிலிருந்த மூன்று உத்தியோகபூர்வ மொழிகள் என்ற உதாரணத்தைச் சிறப்பாக எடுத்துக்காட்டித் தமிழ்த் தரப்பிலிருந்து தமிழையும் உத்தியோக மொழியாக்க வேண்டும் என்று வாதிட்ட தமிழ் உறுப்பினர்களைவிடவும் அதிகம் சிறப்பாக வாதிட்டு தமிழும் உத்தியோக மொழியாக்கப்படவேண்டும் என்று உறுதிபடக் கூறினர்.

ஆனால் பின்பு இதற்கு எதிரான வாதத்தை 1955 ஆம் ஆண்டு முன்வைத்தார். 1955ஆம் ஆண்டு சிங்களமும் தமிழும் உத்தியோக மொழியாகவேண்டும் என்ற கலாநிதி என்.எம்.பெரேராவின் மசோதா மீது பண்டாரநாயக்கா முற்றிலும் எதிர்வாதம் புரிந்தார்.

தமிழர் பொறுத்துச் சிங்களவருக்கு இயல்பாகவே அச்சமுண்டு என்பதை விளக்கிய பண்டாரநாயக்கா அந்த அச்சத்தின் அடிப்படையில் தனது முன்னைய நிலைப்பாட்டுக்கு நேர் எதிர்மாறான நிலைப்பாட்டை எடுத்து அதைப் பெரிதும் நியாயப்படுத்தினார்.

1955ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நிகழ்ந்த என்.எம்.பெரேராவின் மேற்படி மசோதா மீதான விவாதத்தின்போதும் 1956 ஜூன் மாதம் நிறைவேற்றப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்தின் மீதான விவாதத்தின்போதும் பண்டாரநாயக்கா மேற்படி நிலைப்பாட்டில் நின்று வாதிட்டார்.

பண்டாரநாயக்காவின் இம்முரண்பாடு தற்செயலானதல்ல. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் அவரது குடும்பம் அங்கிலிக்கன் கிறிஸ்தவத்தைத் தழுவியிருந்தது. டொனமூர் யாப்பை எதிர்நோக்கிய பண்டாரநாயக்கா "டொனமூர் பௌத்தராகத்" தன்னை மாற்றிக் கொண்டார் என்று அவர் மீது ஒரு விமர்சனம் உண்டு.

கொள்கைப் பிடிப்பைவிடவும் அதிகாரப் பிடிப்பின் பொருட்டு இவர் ஒரு நிறம்மாறும் பட்சி என்பதை இவரது முற்கால, பிற்கால வாழ்க்கை அனைத்தும் நிரூபித்து நிற்கின்றன. பண்டாரநாயக்காவுக்கு முற்போக்குவாதி என்றும் தேசியவாதி என்றும் ஒரு தோற்றமுண்டு. அவரை ஒரு பகுதியாகப் பார்க்கும்போது சில இடங்களில் அப்படியொரு தோற்ற முண்டுதான். ஆனால் முழுமைப்படுத்தி அவரை சாராம்சத்திற் பார்க்கும்போது அவர் ஒரு பிற்போக்குவாதிக்குரிய பாத்திரத்தையே வகுத்துள்ளார். விருப்பு வெறுப்புக்கு அப்பால் இதை ஆழமாகப் பரிசீலிக்க வேண்டியது அவசியம்.

(தொடரும்)

# ஏன்...? அப்படி...?

நட்சத்திரா

42



## தேனைத் தலையில் வைத்தால் முடிநரைக்குமா?

தேனைத் தலை முடியில் படுமாறு செய்துவிட்டால் நரைத்துப்போய்விடும் என்று நமது முன்னோர்கள் எச்சரித்து வருவதைக் கண்டிருப்பீர்கள். முன்னோர்கள் மாத்திரமல்லர், முன்னோர்கள் வழி பரவிய இந்தச் செய்தி இப்போதும் நம்மவர்கள் பலர் மத்தியில் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதன் உண்மைத் தன்மை என்ன...? தலைமயிரில் தேன் பூசப்பட்டால் அது நரைக்குமா இல்லையா? இவ்வாறு கூறப்பட்டதன் பின்னாலுள்ள உண்மையான காரணம்தான் என்ன? என்றெல்லாம் தேடினால்...,

முன்னைய காலத்தில் இனிப்புகள், மிட்டாய்களின் ஆதிக்கம் குறைந்திருந்தது. இனிப்புப் பண்டங்களையே குழந்தைகள் அதிகம் சுவைக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். அந்த வகையில் தேன் பிரபல்யமான இனிப்புணவாக இருந்தது. பிள்ளைகள் தமது உள்ளங்கையில் தேனை எடுத்து அதை ரசித்து ருசித்து நக்கிச் சுவைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதை உடனடியாகச் சுவைத்து முடிப்பார்களா என்றால் அது தான் இல்லை. மிக ஆறுதலாக... தமது உள்ளங்கைக்கு எட்டிவிட்ட இனிப்பை மெல்ல மெல்ல நக்கி மகிழும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். இதனால் அவர்களின் உள்ளங்கையில் தேன் நீண்ட நேரம் ஒட்டிக்கொண்டிருந்தது. அத்தகைய சந்தர்ப்பங்களில் அதை உடனடியாகச் சுவைத்துக் கைகளைச் சுத்தப்படுத்த வைக்கவேண்டும் என்பதற்காக முன்னோர்கள் சில உத்திகளைக் கையாண்டனர்.

உள்ளங்கையில் தேனை மறந்துபோய் விட்டுவிட்டாலோ அடர்த்தி கூடிய அதைச் சரிவர அகற்றாமல் விட்டாலோ அந்த இனிப்பைத் தேடி எறும்புகள் வந்து கையில் கடித்துவிட வாய்ப்புண்டு. கையைச் சுத்தப் படுத்தவோ கழுவவோ மறந்து பிள்ளைகள் விளையாட்டுப் பராக்கில் இருந்து விட்டுப் பின்னர் தமது தலையில் கைகள்படுமாறு செய்யும் சந்தர்ப்பங் களில் தேன் தலையில் பட்டுவிட்டாலும் அடர்த்தியான அதைத் தலையிலிருந்து அகற்றுவது சிரமம். தலையில் பட்ட தேனுடன் பிள்ளைகள் உறங்கும் சந்தர்ப்பங்களில்

தலையிலும் எறும்புகள் குடியேறி முகம், காது, கன்னங்களில் கடிக்கவும் வாய்ப்புண்டு, இதனால்தான் சிறுவர்கள் தலையில் தேனைப் பிரட்டி விடாமல் இருப்பதற்காக தலையில் தேன் பட்டால் தலைமயிர் நரைத்து விடும் என்று எச்சரிக்கைப் பேச்சைச் சொல்லிப் பயப்பிடுத்தினார்கள். ஆனால் உண்மை அதுவல்ல.

காட்டில் தேன் எடுக்கச் செல்பவர்களுக்குத் தேனி கொட்ட வரும் போது தேன் எடுத்த கையால் அவற்றைக் கலைப்பார்கள். அப்போது தேன் அவர்களின் தலை முடியில் படுவதுண்டு. உயரமான மரங்கள், குகைகள், குன்றுகளில் இருந்து தேன் எடுக்கும்போது தலையில் தேன் ஊற்றுண்டும் சந்தர்ப்பங்களும் உண்டு. அப்படிப் பார்த்தால் தேன் எடுப்பவர்கள் அனைவரும் நரைமுடியுடன் இருக்கவேண்டும். அப்படி எதுவும் நடக்கவில்லை. ஆக, தலையில் பூச வேண்டாம் என்பதன் உள்ளார்ந்தம் வேறு. தேன் எண்ணெய் போன்று தடிப்பாக இருப்பதால் தலைமயிரில் பட்டால் துடைத்தோ கழுவியோ போக்குவது சிரமம். அதே வேளை அது இனிப்பாக இருப்பதால் எறும்புகள் மொய்த்து கண், காது ஆகிய இடங்களில் கடித்துத் தொல்லைப்படுத்த வாய்ப்புண்டு.

---

*சமையல் சமையல்*





# சர்க்கரைப் பொங்கல் சமைப்போம் வாரீர்...!



தை மாதம் வந்துவிட்டாலே முதலில் ஞாபகத்துக்கு வருவது பொங்கல்தான். கண்ணுக்குத் தெரிகின்றதும் பூமியினதும் பூமியில் உள்ளவற்றினதும் உயிர் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பதுமான சூரியனுக்கு நன்றி செலுத்தும் நிகழ்வே பொங்கல். ஆனால் அதையும் தாண்டித் தமிழர்களின் புதுவருடப் பிறப்பு என்பதுதான் பொங்கலுக்கு மிகச் சிறப்பைக் கொடுத்து நிற்கிறது. ஆங்கிலப் புதுவருடத்தையும், சிங்களவர்களும் தமிழருமாகச் சிங்களப் புதுவருடத்தையும் கொண்டாடப் பழக்கப்பட்டுவிட்ட தமிழர்களுக்குப் பொங்கல் தனிச் சிறப்பானது. அந்த நாளை வரப்போகின்ற தமிழர்களின் புதுவருடத்தன்று இனிப்பான சர்க்கரைப்பொங்கலைத் தயாரிப்பது எவ்வாறு என்று இந்த வாரம் பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

சிவப்பு அரிசி (தீட்டல்) - அரைக் கிலோ
சர்க்கரை - கால் கிலோ
கற்கண்டு - சிறிதளவு
பயறு - 100கிராம்
தேங்காய்ப்பால் - ஒரு தேங்காயிலிருந்து பெறப்பட்ட முதல் பால்
பசுப்பால் - ஒரு கப்
கச்சான் முத்து, கஜூ, பிளம்ஸ், பேரீச்சம்பழம் ஆகியன தலா 50 கிராம் அளவு.
நெய் - ஒரு மேசைக்கரண்டி
ஏலக்காய்கள் - 4

**எப்படிச் செய்வது...?**

நீங்கள் பொங்கலுக்கு வாங்கிய புத்தம் புதிய பானையை அடுப்பிலி வைத்து அதன் முக்கால்வாசிக்கு நீர் இட்டுச் சிறிதளவில் பசுப்பாலும் விட்டு அடுப்பில் வைத்து நன்கு கொதிக்க வையுங்கள். கொதித்தும் அரிசி, பயறு ஆகியவற்றைக் கழுவிச் சுத்தம் செய்து அதனுள் இடுங்கள். அரிசி வெந்து வர தேங்காய்ப்பால் மற்றும் எஞ்சியுள்ள பசுப்பாலை விடுங்கள். சர்க்கரை, கற்கண்டு, கச்சான் முத்து, கஜூ, பிளம்ஸ், பேரீச்சம்பழங்கள் (நறுக்கி) ஆகியவற்றை இட்டு நன்கு கிளறி விடுங்கள். கையோடு நெய் மற்றும் ஏலக்காய்களைப் பொடித்துத் தூளாக்கிச் சேர்த்துக் கிளறுங்கள். அடுப்பில் தணலைக் குறைத்துப் பொங்கல் பதத்துக்கு வரும்வரை காத்திருங்கள். பொங்கல் இறுகி வந்ததும் இறக்கிச் சூரியனுக்குப் படையல் செய்து உறவினர்களுக்கு பரிமாறுங்கள். நீங்களும் உண்டு மகிழுங்கள்.



தங்கவடிவு

# வெள்ளை நீர் சுத்தமானது...?

மாதவன் வெள்ளையாக இருப்பதால் பொய் சொல்லியிருக்க மாட்டார் என்று வடிவேலுவுக்குச் சிலர் கூறுவார்கள். அதற்கு வடிவேலு, "இதென்னடா புதுப் புரளியாயிருக்கு" - என்பார். தென்னிந்திய நகைச்சுவை நடிகர் வடிவேலு நடித்த ஒரு படத்தில் வரும் ஒரு காட்சி இது. அதுபோலவே நீர் வெள்ளையாக இருந்தால் அது நல்ல நீர் என்ற அபிப்பிராயம் பலர் மத்தியில் நிலவுகிறது. அது உண்மையல்ல. வெள்ளையாக இருப்பவன் பொய் சொல்ல மாட்டான் என்பதற்கு ஒப்பானது.

**குடிதண்ணீர் தொடர்பான சச்சரவு**

சுன்னாகம் பகுதியில் அண்மையில் இரண்டு நபர்களுக்கிடையில் யாழ்ப்பாணத்துக் குடிதண்ணீர் தொடர்பில் வாதப் பிரதிவாதம் ஏற்பட்டுக் கைகலப்பு ஏற்படும் அளவுக்கு நிலமை முற்றியது. அயலில் நின்றவர்களால் அது தவிர்க்கப்பட்டாலும் இறுதியில் தூஷன வார்த்தைகள் செல்லடித்ததுபோல விழுந்து வெடித்தன. இந்த விவாதத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் வழங்கல் வேலைத்திட்டத்தில் குழாய்களைப் பதிக்கும் ஒரு நிறுவனத்தில் பணி புரிபவர். அவரிடம் அவரது நண்பர், உன்னைச் சந்திக்க வேணும் எண்டுதான் இருந்தனான். இப்ப நீங்கள் புதைக்கும் குழாய்களுக்கு எங்கையிருந்து தண்ணி எடுக்கப் போறியள் அதற்கான தண்ணீர் மூலம் என்ன? - என்று கேட்க அதற்கு அவரிடம் நேரடியான பதில் இருக்கவில்லை.

நிலத்தடித் தண்ணீர் அதிகம் மாசடைய வாய்ப்புள்ளது அதற்காகத்தான் குழாய்களைப் பதிக்கிறோம் என்று கூறி சமாளிக்க முயன்றார். எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்து நிலத்தடி தண்ணீர் குடிக்க முடியாது மாசடைந்துவிடும் என்ற செய்தி அதற்குள் இழையோடியிருக்கிறது.

அதைக் கேட்ட மற்றவர் "நீங்கள் உப்பிடிச் சனத்தைப் பயப்பிடுத்திப் போத்தில் தண்ணி விற்கும் நபர்க ளுக்கு வியாபாரத்தைக் காட்டுறீங்கள். எங்கட கிணத்துத் தண்ணி சரியில்லை என்று கூறும் நீங்களே அதே தண்ணியை எடுத்துப் பில்டர் பண்ணி அழுக்குப் போக்கி தண்ணியை வெள்ளையாக்கி அதைப் பணத்துக்கு விற்கப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்"- என்று எரிந்து விழுந்தார்.

**எங்கட கிணத்துத் தண்ணி சரியில்லை என்று கூறும் நீங்களே அதே தண்ணியை எடுத்துப் பில்டர் பண்ணி அழுக்குப் போக்கி தண்ணியை வெள்ளையாக்கி அதைப் பணத்துக்கு விற்கப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்**

**கிணத்துத் தண்ணி நல்லது**

நண்பர்களின் கருத்து மோதலைக் கவனித்துக்கொண்டி ருந்த இன்னொருவர், சுன்னாகம் மின்சார சபை ஓயில் கலந்ததால் தண்ணியிலை ஒரு பிரச்சினை இருந்தது. அதுவும்கூட அந்த வருடம் பெய்த கடும் மழையால் இயல்பாகவே அந்த நிலை மாறிப் போயிற்று என்றார்.

"என்ர மகன் ஒருவர் இங்கிலாந்தில் இருக்கிறார் அவர் யாழப்பாணம் வந்துபோனபோது எங்கட கிணத்துத் தண்ணியை 4 போத்தல்களில் கொண்டு போனார். இங்



கிலாந்திலுள்ள ஆய்வுகூடத்தில் பரீசீலித்தபோது அதில் எவ்வித பிரச்சினையும் இல்லை, குடிப் பதற்கு உகந்தது என்று சான்றிதழ் தந்தனர் என்று கூறினார். இந்த எண்ணெய்ப் பிரச்சினையை அரசியல்வாதிகள் தமது அரசிய லுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதும் அவர் கள் சில கிண றுகளுக்குள் கழிவு எண்ணெ ய்யை ஊற்றி அவற்றிலிருந்து மாதிரிகளை எடுத்தனர் என்றும் அறிகிறோம்" - என்றார்.

கிணற்றுத் தண்ணீர் குடிக்கும் மக்களுக்குப் பல்வேறு நோய்கள் ஏற்படும் என்றால் அனைவருக் கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கவேண் டும். ஏனெனில் யாழ்ப்பாணத்தில் போத்தல் தண்ணீர் குடிப்பவர்க ளின் தொகை மிகவும் குறைவு. ஆனால் நிலமை அவ்வாறில்லையே...? என்று அவர் மேலும் வினவினார்.

அவர் சுட்டிக்காட்டிய விடயம் உண்மையிலேயே ஆய் வுக்கு உட்படுத்தப்படவேண்டியது. ஏனெனில் சுன்னா கம் மின் உற்பத்தி நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிக ளில் கிணற்று நீர் மாசுபட்டிருக்கின்றது என்று கண்ட றிந்து அறிவித்த அரச அதிகாரிகள், அதன் பின்னர் இன்றுவரையில் நிலத்தடி நீரின் நிலமை என்ன எப்ப தைக் குறித்து எந்த ஆய்வுகளையும் செய்து முடிவுக ளைப் பகிரங்கப்படுத்தியதாக இல்லை. அப்படியென்றால் யாழ்ப்பாணத்து நிலத்தடித் தண்ணீர் மாசு என்கிற தகவ



லைப் பரப்பியதன் பின்னால் உள்ள சதி என்ன என்பது விசாரிக்கப்படவேண்டிய ஒன்றுதானே?

**யாழ்ப்பாண நிலத்தடி நீர் மாசடைவு**

இதற்காக யாழ்ப்பாணத்து நிலத்தடித் தண்ணீர் மாசு களே அற்ற தூய குடிதண்ணீர் என்று யாரும் அர்த்தப் படுத்திவிடக்கூடாது. யாழ்ப்பாண நகரப்பகுதியில் கிண றுகளும் மலசலகூடங்களும் பெரும்பாலும் அருகருகாக இருப்பதால் நிலத்தடி நீருக்குள் மலக்கசிவு இருக்க வாய்ப்புண்டு. மாறாக மலசலகூடத்துக்கும் கிணற்றுக்கும் தகுந்த இடைவெளி பேணப்படும் இடங்களில் இந்தப் பிரச்சினையிருப்பதாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகில் காங்கேசன்துறை வீதியிலி ருக்கும் கிணற்றில் அதிக மக்கள் நீர் அள்ளிக் குடிப்ப தைக் காணலாம். அதற்குச் சற்றுத் தள்ளி மனோகராத் திரையரங்குக்கு முன்னாலுள்ள கோவில் கிணற்றிலும் பலர் நீர் அள்ளி அருந்துகிறார்கள். அவர்களுக்கு நீரால் வரும் நோய்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இதைவிட அதிக விவசாய மருந்துகளைப் பாவிப்ப தால் நைத்திரேற்றின் செறிவு யாழ்ப்பாணத்து நீரில் இருப்பதாகக் கூறப்படுவதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.


**நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டும்**

நகரப் பகுதிகளில் மலக் கசிவுப் பிரச்சினை மற்றும் நைத்திரேற் பிரச்சினையுள்ள இடங்களைத் தவிர்த்தாவது ஏனைய இடங்களில் நிலத்தடி நீரைப் பேணவேண்டும். போத்தலில் அடைத்து வருகின்ற நீர் இலங்கையின் நீர் வீழ்ச்சிகளில் பெறப்பட்டு நிறுவனங்களின் கூடங்களில் சுத்திகரிக்கப்பட்டு வந்துசேர்கிறது. இவற்றுக்கான உற் பத்திச் செலவு அதிகமாக இருப்பதால் விலையும் அதி கம். ஒரு லீற்றர் பாலின் விலையைவிட சில குடிதண் ணீர்ப் போத்தல்களின் விலை அதிகம். போத்தல் தண் ணியை விடுத்து நமது நீரைச் சுத்ததிகரித்துக் குடிக்க முற்பட்டாலும் வடிகட்டும் கருவிகளின் பாவனைக் காலம் அவற்றின் பராமரிப்பு, விலை என அதுவும் செலவுக்குரியதாகிவிடும்.

இவ்விரு வழிகளிலும் வெள்ளையாக்கி வரும் தண்ணீரில் தூசியும் அழுக்கும் நீக்கப்படுமே தவிர நச்சுப்பதார்த்தங்கள் முற்றாக நீக்கப்படுவதில்லை. ஆகவே நமது நிலத்தின் நீரை இயன்ற வரைக்கும் பாதுகாக்கவேண்டும். ஆனாலும்கூட போத்தல் நீர் நல்லது என்ற எண்ணமும் தண்ணி வெள்ளையாக இருந் தால் தூய்மையானது என்ற எண்ணமும் மக்கள் மத்தி யில் இருக்கத்தான் செய்கின்றன. இந்த எண்ணத்தைக் களைவது மிக முக்கியம்.

# உயிரிப் பல்வகைமைப் பாதுகாப்போம்

நாராயணி சுப்ரமணியன்



இயற்கை மீது நிகழ்த்தப்படும் அழிவு, மனிதர்களைப் பாதிக்கும். பேரிடர்களின்போதுதான் பலரும் இதனை உணர்ந்துகொள்கிறார்கள். இயற்கை அழிவில் பெரும்பாலானவை மனிதச் செயல்பாடுகளால் ஏற்படுபவைதான் எனும்போது அதைத் தடுக்கும் தார்மிகப் பொறுப்பும் நமக்கு இருக்கிறது.

அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான முக்கியத் தருணம் தற்போது வாய்த்திருக்கிறது. உயிரிப் பல்வகைமைக்கான 15ஆவது உச்சி மாநாடு (COP 15- Convention on Bio diversity) அந்த வாய்ப்பை நல்கியிருக்கிறது.

**அழிக்கும் கரங்கள்**

உலகில் 1970ஆம் ஆண்டிலிருந்து இப்போதுவரை மொத்த வனவிலங்குகளில் 69% வரை குறைந்திருக்கின்றன. இப்போது இருக்கும் உயிரினங்களில், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் 10 சதவிகிதமாவது அழியும் என்று சமீபத்திய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டுக்கான உலகளாவிய 10 அச்சுறுத்தல்கள் பட்டியலில், உயிரிப் பல்வகைமையின் (Biodiversity) அழிவு மூன்றாவது இடத்தில் இருக்கிறது.

உலகின் மொத்த உயிரினங்களில் கால்வாசிக்கும் மேல், அதாவது, 10 லட்சம் இனங்கள் அழியக்கூடிய நிலையில் இருக்கின்றன. எங்கோ ஒரு கொறி விலங்கோ ஒரு மழைக்காட்டில் காளான் இனமோ அழிவதற்கும் நமக்கும் தொடர்பு இல்லை என்று நாம் இருந்துவிட முடியாது. அதை இந்த மாநாடு அழுத்தமாக உணர்த்தியிருக்கிறது.

கனடாவின் மான்ட்ரியால் நகரில் மார்கழி மாதம் 7 முதல் 21 நாள் வரை நடந்த இந்த மாநாட்டில், 190 உலக நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பல்வேறு அரசியல் காரணங்கள் மற்றும் கொரோனா பெருந்தொற்று காரணமாக 4 ஆண்டுகளாக இந்த மாநாடு நடைபெறவில்லை. இம்முறை அது மீண்டும் கைகூடியது. 2010இல் தீர்மானிக்கப்பட்ட உலகளாவிய ஐசி உயிரிப் பல்வகைமை இலக்குகளில் (Aichi Biodiversity Targets) ஒன்றுகூட எட்டப்படவில்லை. எகிப்தில் சமீபத்தில் நடந்துமுடிந்த காலநிலை உச்சி மாநாட்டிலும் இயற்கை/ உயிரிப் பல்வகைமை பற்றிய விரிவான விவாதங்கள் நடைபெறவில்லை. எனவே, மான்ட்ரியால் மாநாடு மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

**முக்கிய இலக்குகள்**

மாநாட்டில் பல உப தலைப்புகளில் பல்வேறு குழுக்கள் கூடி விவாதித்தன. இறுதி அறிக்கையில், கன்மிங்-மான்ட்ரியால் 2050 இலக்குகள் (Kunming-Montreal Goals of 2050) என்ற தலைப்பில் நான்கு இலக்குகள் வெளியிடப்பட்டிருக்கின்றன:

1. எல்லா சூழல் அமைப்புகளுடைய ஒழுங்கமைவு, இணைப்புகள் மற்றும் வலிமை பராமரிக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்டு, மீட்டெடுக்கப்படவேண்டும். மனிதர்களால் ஏற்படும் உயிரின அழிவுகள் நிறுத்தப்படவேண்டும். 2050ஆம் ஆண்டுக்குள் இயற்கையான சூழலின் பரப்பளவு அதிகரிக்கப்படவேண்டும். மரபணுப் பல்வகைமை (Genetic Diversity) பராமரிக்கப்படவேண்டும்.

2. உயிரிப் பல்வகைமையானது வளங்குன்றா முறையில் பயன்படுத்தப்படுவதையும், இயற்கையிலிருந்து மக்களுக்குக் கிடைக்கும் அனைத்தும் தொடர்வதையும் உறுதிசெய்யவேண்டும்.

3. டிஜிட்டல் மரபணுத் தொகுதிகள் உள்ளிட்ட மரபணு வளங்களிலிருந்து கிடைக்கும் பொருளாதாரப் பயன்கள் மற்றும் பிற பயன்கள் அனைவருக்கும் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

4. மாநாட்டுத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கேற்ற சூழலை உருவாக்கவேண்டும். இதில் பொருளாதார உதவி, தகுதிகளைக் கட்டமைப்பது, தொழில்நுட்ப மற்றும் அறிவியல் ஒத்துழைப்பு, தொழில்நுட்பப் பகிர்தல் எல்லாமே அடங்கும்.

இதைத் தவிர 23 முக்கிய இலக்குகளும் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. அவற்றில், 'பாலினச் சமத்துவம்' பற்றிய இலக்கும் இடம்பெற்றிருப்பது முக்கியமானது. தொல் குடிகளின் உரிமைகள் மதிக்கப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

## ஆழ்கடலிலிருந்து கனிம வளங்களை எடுக்கும் செயல்பாடு கடல்சார் உயிரிப் பல்வகைமைக்கு ஒரு மிகப் பெரிய அச்சுறுத் தலாக உருவாகியிருக்கிறது

**நிதி முக்கியத்துவம்**

இந்த மாநாட்டின் தீர்மானங்களிலேயே மிகவும் முக்கியமானது, 2030ஆம் ஆண்டுக்குள் 30% பூமிப்பரப்பைப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக மாற்றவேண்டும் என்ற இலக்குதான். நிலம், கடல் ஆகிய இரண்டுமே இதில் அடங்கும். உயிரிப் பல்வகைமையைப் பேணுவதில், பாதுகாக்கப்பட்ட இடங்களுக்கு முக்கிய பங்கு உண்டு என்பதையொட்டியே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

இப்போதைக்கு 17% நிலப்பரப்பும் 7 முதல் 10% கடற்பரப்பும் மட்டுமே பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பதால், இந்த இலக்கு முக்கியமானதாக இருக்கும். உயிரினங்கள் அழியக்கூடிய ஆபத்தை 2030ஆம் ஆண்டுக்குள் 20% குறைப்பது, கரிமக் கால்தடத்தைக் குறைப்பது, சீரழிந்த நிலங்களில் 30% பரப்பளவை 2030க்குள் மீட்டெடுப்பது உள்ளிட்ட இலக்குகளும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

உயிரிப் பல்வகைமையை அழிக்கும் செயல்பாடுகளுக்குக் கொடுக்கப்படும் மானியங்களை 2030ஆம் ஆண்டுக்குள் 500 பில்லியன் டொலர் வரை குறைக்க வேண்டும் என்பது மற்றொரு முக்கியமான முடிவு. சூழல் மீட்டெடுப்பு உள்ளிட்ட எல்லா சூழல்சார் செயல்பாடுகளுக்கும் நிதி உதவி அவசியமானது.

அதிலும் குறிப்பாக, மேலைநாடுகள் மற்றும் பிற வளர்ந்துவரும் நாடுகளுக்கு இடையே உள்ள பொருளாதார இடைவெளி அதிகமாக இருக்கும் இன்றைய காலகட்டத்தில், ஒரு சில நாடுகளுக்கு இந்த நிதி உதவிதான் உயிர்ச் சரடாகவே இருந்து இயற்கையைப் பாதுகாக்கும்.



**முக்கியப் பின்னடைவுகள்**

நுகர்வு, அயல் ஊடுருவி விலங்குகள், உயிரிப் பல்வகைமையின் வணிகமாக்கல், உணவு, பூச்சிக்கொல்லி மருந்துகள் பற்றிய நேரடியான இலக்குகள் எதுவும் உருவாக்கப்படவில்லை. முந்தைய மாநாட்டில் இருந்த சூழல் அமைப்புகள் பற்றிய சில தீர்மானங்கள் இந்த மாநாட்டு அறிக்கையில் நீக்கப்பட்டிருக்கின்றன.

தனிப்பட்ட ஒரு வரியில் தொல்குடிகளின் உரிமை பற்றிப் பேசியிருந்தாலும் 30% பகுதிகளைப் பாதுகாக்கும் போது அங்கே இருக்கும் தொல்குடிகளின் உரிமைகளை மீறக்கூடாது, அவர்கள் வெளியேற்றப்படக்கூடாது என்று அறிக்கை வலியுறுத்தவில்லை.

உயிரிப் பல்வகைமை பற்றிய அரசின் தீர்மானங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் கிடைக்காததால், அமெரிக்காவால் பங்கேற்க முடியவில்லை. அமெரிக்காவே கலந்துகொள்ளவில்லை என்பது பிற நாடுகளின் பொறுப்புணர்வில் நிச்சயமாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். பொதுவாக, வெற்றிகரமானதாகக் கருதப்படும் ஒரு மாநாட்டில்கூடக் கடல்சார் சூழல் குறித்த கவலை பதிவாவதில்லை. இம்மாநாடும் விதிவிலக்கல்ல. காடுகள், நிலம், விவசாயம் பற்றியெல்லாம் விரிவாகப் பேசப்பட்டிருக்கும் இறுதி அறிக்கையில், கடல் சூழல் பற்றிய வரிகள் மிகவும் குறைவு. ஆழ்கடலிலிருந்து கனிம வளங்களை எடுக்கும் செயல்பாடு கடல்சார் உயிரிப் பல்வகைமைக்கு ஒரு மிகப் பெரிய அச்சுறுத் தலாக உருவாகியிருக்கிறது. ஆனால், பவளத்திட்டுகளைப் பாதுகாப்பது, மீன்பிடித் தொழிலில் உள்ள பிரச்சினைகளைச் சரிசெய்வது, ஆழ்கடல் கனிமச் சுரங்கங்களை நிறுத்துவது உள்ளிட்ட முக்கிய கடல்சார் பிரச்சினைகள் பற்றிப் பேசப்படவே இல்லை.

மேலும், 'உலக அளவில் 30% பாதுகாக்கப்பட வேண்டும்' என்ற இலக்கில் கடல் சூழலும் அடங்கும் என்பதே குழப்பத்தை விளைவிக்கிறது. இது நாடுகளின் எல்லைக்கு உட்பட்ட பகுதியா அல்லது எல்லை கடந்த கடல் பகுதியும் இதில் வருமா என்பன உள்ளிட்ட கேள்விகளுக்கு விடை இல்லை.

சில சறுக்கல்கள் இருந்தாலும் வெற்றிகரமாகவே நடந்து முடிந்துள்ளது உயிரிப் பல்வகைமை உச்சி மாநாடு. 'இயற்கை மட்டும் இல்லாவிட்டால், நாம் ஒன்றுமே இல்லை' என்கிறார் ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ குத்தேரஸ். அந்தப் புரிதலோடு பல தீர்மானங்கள் இந்த மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இனி இவற்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில்தான் எல்லாமே இருக்கிறது.

# அழிவற்றவர் பீலே!



ஓர் பகுதி நேர (அமெச்சூர்) கால்பந்து வீரரின் மகனாகப் பிறந்து, உலகின் தலைசிறந்த கால்பந்து வீரராக, ஓர் அரசராக வாழ்ந்து மறைந்திருக்கிறார் பீலே. 'கால்பந்துக் கடவுள்' எனப் போற்றப்படும் அளவுக்கு அந்த விளையாட்டின் இலக்கணத்தையே மாற்றியமைத்தவர் பீலே, அவரது இறப்பு கத்தார் கால்பந்து உலகக் கோப்பை முடிந்த தருணத்தில் நிகழ்ந்திருப்பது வரலாற்றின் விநோத நிகழ்தகவு. தனது மிகச் சிறந்த ஆட்டங்களை வெளிப்படுத்திய சான்டோஸ் நகரின் விலா பெல்மிரோ மைதானத்தில் பீலேவின் இறுதிச்சடங்கு நடந்தது. அந்த மாபெரும் வீரனுக்கு அதைவிட வேறு என்ன பேறு வேண்டியிருக்கிறது?

**வெ.ச.மோகன்**

### உருப்பெற்ற பிம்பம்

மூன்று முறை உலகக் கோப்பையை பிரேசிலுக்குப் பெற்றுத் தந்தவர் பீலே. இன்றுவரை எந்த நாட்டு வீரராலும் முறியடிக்கப்படாத சாதனை இது. பீலே தன் வாழ்நாளில் மொத்தம் 1,281 கோல்களை அடித்திருக்கிறார். பெரும்பாலான கோல்கள், மைதானத்தில் இருந்த ரசிகர்களைத் தாண்டி பிறர் பார்த்திராதவை. எனினும், வர்ணனைகள் வானொலியில் ஒலிபரப்பான காலகட்டத்திலேயே பீலே எனும் பெயர், உருவமற்ற வீரராக ரசிகர்கள் மனதில் பதிந்துவிட்டது. பின்னர், தொலைக்காட்சி நேரலையாகப் போட்டிகள் ஒளிபரப்பானபோது அந்த மின்னல் வேக வீரரைக் கண்டு பிரமித்து நின்றார்கள் ரசிகர்கள்.

1970 இல் மெக்சிகோவில் நடந்த உலகக் கோப்பைப் போட்டிதான் முதன்முதலில் டெக்னிகலர் தொழில்நுட்பத்துடன் வண்ணமயமாகப் பல நாடுகளில் நேரடியாக ஒளிபரப்பானது. பசும்புல் மைதானத்தில் மஞ்சள் வண்ண டிஷர்ட் (பிரேசில் அணியின் சீருடை) அணிந்த மந்திரவாதி பீலேயின் திறனில் கட்டுண்டனர் கால்பந்து ரசிகர்கள். அந்தத் தொடரில் மூன்றாவது முறையாக பிரேசிலுக்கு உலகக் கோப்பையைப் பெற்றுத்தந்தார் பீலே.

### அலங்கரித்த அங்கீகாரங்கள்

1961இல் பிரேசில் அதிபர் ஜேனியோ குவாட்ரஸ், பீலேயை ஒரு தேசியச் சொத்தாக அதிகாரபூர்வமாக

அறிவித்தார். பின்னாட்களில் பிரேசிலின் விளையாட்டுத் துறை அமைச்சர் பொறுப்பும் அவருக்கு வழங்கப்பட்டது. கறுப்பினத்தைச் சேர்ந்த ஒருவர் அந்தப் பொறுப்புக்கு வந்தது அதுவே முதல் முறை. குறிப்பாக, அடிமை முறை ஒழிக்கப்பட்ட கடைசி மேற்கத்திய தேசமான பிரேசிலில் இத்தகைய பெருமிதங்களை அடைந்தது முன்னுதாரணமற்ற சாதனை. இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கால்பந்து வீரர் என ஃபிஃபா அவரைக் கொண்டாடியது. நூற்றாண்டின் சிறந்த தடகள வீரர் என ஒலிம்பிக் குழுவும் புகழாரம் சூட்டியது.

இவற்றையெல்லாம் தாண்டி அவருக்குக் கிடைத்த முக்கியமான கௌரவம், 1977 புரட்டாதி 27இல் ஐநா அவை, அவரை ஓர் 'உலகக் குடி மக'னாக அறிவித்ததுதான். பிரேசிலுக்கு மட்டுமான பெருமிதம் அல்ல, ஒரு சாதனை மனிதராக உலகுக்கே பொதுவானவர் என அவருக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் அது. அந்தச் சான்றிதழ் வழங்கப்பட்ட தினம் தனக்கு மிகவும் சிறப்பானது என பீலே பெருமிதத்துடன் பதிவுசெய்திருக்கிறார். உண்மையில், 1950களிலேயே தனது அசாத்திய விளையாட்டுத் திறன் மூலம் அவர் பிரேசில் எல்லைக்கோட்டைத் தாண்டி, உலகமெங்கும் அறியப்பட்டிருந்தார். ஐநா வழங்கியது அதிகாரபூர்வ அங்கீகாரம்தான்.

**எல்லை கடந்த அன்பு**

கால்பந்து மீதான அவரது காதல், தேச எல்லைகளுக்குள் அடைபட்டதல்ல என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. 1975இல் அமெரிக்காவின் நியூ யார்க் காஸ்மோஸ் அணியில் அவர் இணைந்ததன் பின்னணியில், கால்பந்து விளையாட்டை வளர்த்தெடுக்கும் அவரது கனவும் இருந்தது. அந்தக் காலகட்டத்தில் அமெரிக்கர்களிடம் கால்பந்து குறித்துப் பெரிய ஆர்வம் இருந்ததில்லை.

**இவற்றையெல்லாம் தாண்டி அவருக்குக் கிடைத்த முக்கியமான கௌரவம், 1977 புரட்டாதி 27இல் ஐநா அவை, அவரை ஓர் 'உலகக் குடி மக'னாக அறிவித்ததுதான்**

காஸ்மோஸ் அணியில் அவர் இணைந்த பின்னர், அமெரிக்கர்களின் கவனம் கால்பந்தின் பக்கம் திரும்பியது. 1990 உலகக் கோப்பைப் போட்டியில், 40 ஆண்டுகளில் முதன் முறையாக அமெரிக்கக் கால்பந்து அணி கலந்துகொண்டது. 1994இல் முதன் முறையாக உலகக் கோப்பைப் போட்டியையும் நடத்தியது. அந்தப் போட்டியை பிரேசிலில் நடத்தவே ஃபிஃபா திட்டமிட்டது. அமெரிக்காவுக்கு அந்த வாய்ப்பு சென்றதன் பின்னணியில் பீலேவும் இருந்தார்.

பிரேசிலைவிடவும் அமெரிக்காவில் போட்டி நடைபெற்றால், அது உலகக் கோப்பையின் முகத்தையே மாற்றும் என அவர் உறுதியாக நம்பினார். அவரது





நம்பிக்கை வீண் போகவில்லை. அதன் பின்னர், அமெரிக்காவில் கால்பந்துப் புரட்சியே நடந்தது. வல்லரசின் பங்கேற்பில், கால்பந்து விளையாட்டு வணிக ரீதியில் வளம்பெற்றது.

உலக நாடுகளுக்கு இடையே இருந்த பிணக்கு களுக்கு நடுவே ஒரு தேவதூதராகச் செயல்பட்டார் பீலே. தேச எல்லைகளைக் கடந்த உலக நாயக னாகக் கொண்டாடப்பட்டார். தனது ஆப்பி ரிக்கப் பூர்விகம் குறித்த ஆழ்ந்த புரிதல் அவருக்கு இருந்தது. தனது முன் னோர்களில் ஒருவர் அங்கோ லாவைச் சேர்ந்தவர் எனக் குறிப்பிட்ட பீலே, எடி ஸன் ஆரான்ட்ஸ் டு நாஸிமியான்டோ எனும் தன் இயற்பெ யரில் 'நாஸிமியா ன்டோ' என்பதன் நதிமூலம் நைஜீரியா என்றும் பதிவுசெய்திருக் கிறார்.

உள்நாட்டுப் போரால் அதிர்ந்து கொண்டிருந்த நைஜீரியாவில் விளை யாட 1967இல் அவர் மேற்கொண்ட பயணம், வரலாற்றில் பதிவாகியிருக் கிறது. மோதிக்கொண்டிருந்த அரசுத் தரப்பும், பையாஃப்ரா படைகளும் அவர் விளையாடுவதைப் பார்க்க சண்டையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தன. புன்னகை தரித்த முகத்து டன், கால்பந்தை ஒரு மதத்தைப் போல் உலகெங்கும் பரப்பினார். அவர் கையெழுத்திட்ட அவரது மஞ்சள் டிஷர்ட் வாடிகன் அருங் காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

**அழிவற்றவர்**


ரசிகர்களால் மட்டுமல்ல, வர்ணனை யாளர்களாலேயே 'கடவுள்' என விளிக் கப்பட்டவர் பீலே. 'மெஸ்ஸி, ரொனா ல்டோ, நெய்மார், மாரடோனா ஆகி யோர் அபூர்வமான, அற்புதமான வீரர்கள்தான். ஆனால், அவர்களெல் லாம் மனிதர்கள். பீலே மனிதரே அல்லர். அவர் சனிக் கிரகத்திலிருந்து வந்தவர்' என்று பிரமிப்பு அகலாமல் கூறியிருக்கிறார் சக பிரேசில் வீரரான கெர் ஸான். 'நாஸிமியான்டோ இறந்திருக்கலாம். ஆனால், பீலே அழிவற்றவர்' என்று அந்த ஜாம்பவானுக்கு அவர் புகழஞ்சலி செலுத்தியிருக்கிறார்.

ரியோ டி ஜெனிரோவில் உள்ள பிரேசில் கால்பந் துக் கழகத்தின் (CBF) தலைமை அலுவலகத்தின் வெளிச் சுவரில், பீலேயின் உருவம் அச்சிடப்பட்ட பிரம்மாண்டமான போஸ்டர் ஒட்டப்பட்டிருக்கிறது. அதில் 'அழிவற்றவர்' (Eterno) எனும் சொல் எழு தப்பட்டிருக்கிறது. பீலேயின் சாசுவதத்தைச் சொல்ல அந்த ஒரு சொல் போதும்! -

# எண்ணங்கள்

92

ஐயங்கொண்டான் சுவாமிகள்



எமது மனத்திலிருந்து அடிக்கடி பயன்பாட்டிற்கோ உணர்நிலைக்கோ வருகிறவற்றை நினைவு அல்லது ஞாபகம் என கருத்தைக் கட்டமைத்து வைத்திருக்கிறோம். மறுவழமாக அடிக்கடி உணர்நிலைக்கு முன்னிலையாகாதவற்றை மறதிக்கு உட்பட்டதென கருத்தை ஆக்கிக்கொண்டுள்ளோம். நினைத்தல் மற்றும் மறத்தல் என்கிற விடயங்களும் கருத்துருவமாக மனதில் ஏற்றப்பட்டிருக்கிறது.

மறந்துவிட்டதாக கருதிக் கொண்டிருக்கும் விடயமானது குறித்த தருணத்தில் வெளிவரக் காத்திருக்கிறது. மனதினது எங்கோ ஒரு மூலையுள் பதுங்கியிருக்கிறது. இதனையே ஆழ்மனப்பதிவு என்கிறது உளவியல்துறை. மனதில் பதிவாகிய எதுவுமே அழிவதில்லை மாறாக முடங்கியிருக்கிறது என்பது அறிவியல் கொண்டுள்ள நம்பிக்கை. நிறுவியும் உள்ளது.

நாம் இவ்விடத்தில் சற்றுக் கவனத்தைக் குவிப்பது அவசியமானது. நாம் நினைக்காமலேயே நடக்கிறதாகவும் அதுவே விதியெனவும் கூறிக்கொண்டிருக்கிற விடயமானது கேள்விக்குள்ளாகவேண்டிய இடமும் இதுதான். அவ்வாறே எமது கருத்துருக்களும் எம்மால் எப்போதோ ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்றிக்கொண்டுவிட்டு பின்னர் கைவிட்டுவிட்டதாக நம்புகிற விடயங்களும் எமது எண்ணங்களின் வழியாகச் செயலில் வலுவான செல்வாக்கைச் செலுத்துகிறதென் பதைக் கவனித்தல்வேண்டும்.

ஆக நாம் எம்மிடம் மனதினுள் இருக்கிற இருப்புத் தொடர்பான அளவீடொன்றைச் செய்துகொள்வது இயலாத ஒன்றாகவே இருக்கும். மனதில் ஒன்றும் இல்லையென ஒருபோதும் உறுதிபடக் கூறிக்கொள்ளமுடியாது என்பதே உண்மை. மனதை வெறிதாக்குதல் என்பது கூட முடியாத ஒன்றே. மனதினது இருப்பு என்பதை அறியாது எப்படி சுத்திகரிக்கவோ அகற்றவோ முடியும்?

மனதிலுள்ளவற்றை வகைப்படுத்துதல் பகுத்தல் காவுதல் ஓரங்கட்டுதல் என வேண்டுமாயின் எதையாவது செய்துகொள்ளலாம். அழித்தல் என்கிற ஒன்று சாத்தியமற்றதே என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். எதையும் செய்வதற்கு எமது மனமே காரணமாகவும் கருவியாகவும் இருந்துகொண்டிருக்கிறது என்பதை கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். எனவே மறக்க விரும்புகிற ஒன்றை நினைக்காமல் விட்டுவிடுதல் சாத்தியமானதுதானா?

குறித்த ஒரு வியடயத்தை மறக்க விரும்புகிறதாக மனம் எண்ணுகிறபோது அவ்விடயமானது முழுதாக முன்னிலையாகிறது. குறித்த விடயம் தொடர்பான முன்னர் பெற்ற தகவல்கள் தரவுகள் கருத்துக்கள் சமகாலத்துக்கேற்ற மாறுதல்களோடு மீண்டெழுகிறது. அதில் எமது அறிவு மாற்றம் பட்டறிவு தொடர்பான பகுப்பாய்வைச் செய்கிறது. இது தன்னியல்பானது. தடுக்க முடியாதது.

ஆக மறக்கவேண்டும் என்று எடுத்த முயற்சியானது குறித்த விடயம் தொடர்பான இற்றைப்படுத்துதலையே வெற்றிகரமாகச் செய்துகொள்கிறது.

தேவை எதிர் தேவையற்றது என்கிற கற்பிதம்சார் வகைப்படுத்துதலைச் செய்ய முடிந்தாலும் தேவையற்ற



கதிரேசன் காத்தவராயன்

# மாற்றங்களேண்டால் உதுதானோ?

சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டடிக் குப் போனன். அங்கை ஆள்ச் சிலம னைக் காணேல்லை. கூப்பிட்டன். குரலைக்கேட்டு மாஸ்ரர் உற்சாகமாய் 'வாரும் வாரும் கதிரேசர்' எண்டு சொல் லிக்கொண்டு கதவைத் திறந்தார். 'ஆக் கள் இல்லையோ எண்டு நினைச்சன்...' எண்டு நான் சொன்னதுக்கு 'இல் லையப்பா! கதவுகள் யன்னலுகளைத் திறந்துவைக்கப் பயமாயல்லே கிடக் குது?' எண்டார் ஒரு சலிப்போடை.

'சரியாத்தான் சொன்னியள் மாஸ்ரர் களவுகளல்லே பெரிய பிரச்சனையாக் கிடக்குது?' எண்டன். 'அதொரு பக் கம் தொடர்கதை... இந்தப் பனியாலை யல்லே பயமாக் கிடக்குது' எண்டு மாஸ் ரர் சொல்லி முடிக்கேல்லை சுதனைத் தேடிக்கொண்டு அங்கை வழக்கமாய் வாற பெடியள் மூண்டுபேர் வந்தாங் கள். மாஸ்ரர் வரவேற்க இருந்துகொண் டாங்கள்.

'எப்பிடி சேர் இப்ப சுதனுக்கு எப் பிடி?' எண்டொருதன் கேட்டதுக்கு 'ஏன்... சுதனுக்கு என்ன?' எண்டு பதட்டமா னன். 'ஒண்டுமில்லை... அதேதோ ஒரு வகையான வைரஸ் காய்ச்சல் தானே என்ன? சொஞ்சம் முறிச்சுப் போட்டுது.' எண்டு மாஸ்ரர் சொல்லிக் கொண்டிருக்க சுதனும் வெளியாலை வந்து கொஞ்சம் எட்டவாய் இருந்து கொண்டான். முகக் கவசம் போட்டிருந் தான்.

'எப்பிடியெடா இப்ப? மருந்தேதும் எடுத்தனியோ?' எண்டு ஒருதன் கேக்க 'ஓஓ ஓ எடுத்ததுதான்.... ஒண்டு மில்லை சும்மா ஒரு வகையான வைர ஸாலை வாற காய்ச்சல் எண்டுதான் மருந்து தந்தவை... காச்சலும் போட்ட குளிசையுமாய் உடம்பை முறிச்செடுக் குதுகள்' எண்டான் சுதன். 'விளையாட் டில்லை, கடுமையான கவனம் எடுக் கட்டாமல்லே? கொரோனாவின்ரை அப்டேற்றட் வைரஸெண்டுமல்லே சொல்லுறாங்கள்?' எண்டான் ஒராள்.

'தம்பியவை உவர் சொல்லுற மாதிரி கொராவின்ரை அப்டேற் எண்டிற கதை அடிபட்டாலும் சரியானமாதிரி அடக்கியல்லே வாசிக்கினம்?' எண்டு நான் சொல்ல, 'சரியாச் சொன்னீங்கள் ஐயா... காரணமாயிக்கிறது நாங்க ளல்லே? எனி அதையிதைச் சொல்லி நெருக்கடியாக்கினால் இப்பவே வட்டி கட்டக் கடன் கேக்கிற நாடு இன்னும் சிக்கலுக்கை போகிடுமெண்ட

தெனக் கொள்ளும் விட யத்தை மறப்பதென்பது சாத்தியமற்றதாகவே இருக்கும். ஆனால் குறி த்த விடயத்தை பயன் பாட்டிலிருந்து விலக்கி வைக்க முயற்சிக்கலாம். அது சாத்தியமாகலாம். அதனைக்கொண்டு மனத்தைச் சாந்தப்படுத்த முயற்சிக்கலாம்.அவ்வ ளவுதான். மனதினது குழப்பத்தை அதே மனதினால் சாந்தப்படுத்த வேண்டியுள்ளது என்பது தான் வேடிக்கையான உண்மை.

மனம் என்கிற விந் தையை முழுமையாக அறிந்துகொள்வ தென் பது சாத்தியமற்றது. அறிந்துகொள்ளவே இயலாத ஒன்றை கட்டுப் படுத்துவது என்கிறது எப்படிச்சாத்தியமாகும்? ஆனால் நாம் அதனை நோக்கியே எண்ணங்க ளைப் பாயவிடுகிறோம். அதற்காகவே ஏராளமாக முயற்சிகளைச் செய்கி றோம். தீர்வு?

சடமாகக் கைக்கெட் டும் பலவற்றைக் கடந் தும் கைவிட்டும் கற் பிதங்களாலான வற்றைத் தொட்டுவிடத் தூண்டுகிற மனதை கட்டுப்படுத்து வதற்காகப் படாதபாடு பட்டுக்கொண்டி ருக்கி றோம். மனதைக் கட்டுப் படுத்தும் வழிகள் என அலைகிற மனம்தான் திட்டம் போடுகிறது. உள் ளிருந்து எல்லாமாக இயங்கும் மனம் கொண் டியங்கும் வகிபங்கு அலாதியானது.

பிள்ளையையும் கிள் ளித் தொட்டிலையும் ஆட்டுகிற காரியத்தைக் கனகச்சிதமாக ஆற்றுகிற ஒன்றுதான் மனது என் பது கவனத்திலெடுக்க வேண்டிய ஒன்று. கவ னத்திலெடுக் கிறோமா? ஏன்? சிந்திப்போம்.

பயந்தான்...' எண்டான் அதிலையொ ராள்.

'உதுக்கைதான் எலெக்சன்' எண்டு சுதன் சொன்னான். 'அதடா மாற்றங்க ளுக்காக.... மாற்றம் தேவையல்லே?' எண்டு நான் சொல்ல சிரச்சாங்கள். நானும் சிரிச்சன்.

'மாத்திறது என்னத்தை? ஒண்டுக்குப் பதிலாய் அதே தரத்திலையிருக்கிற இன் னொண்டையாயல்லே கிடக்குது? புதிசாய் ஒண்டுமில்லையல்லே?' எண்டார் மாஸ்ரர்.

'உண்மைதான் சேர்! வடிவங்களைத் தான் மாத்திறம்... உள்ளடக்கம் ஒண்டி லையும் மாற்றங்களைக் காணேல்லை யல்லே?' எண்டானொருத்தன். 'அதுக்கை சிரிப்பான விசயம் ஒவ்வொரு விசயத்தை யும் மாத்திறம் பாரெண்டு வெளிக்கிடு றதும்... புதிசாய் வாறது அப்பிடியிருக்கும் இப்பிடியிருக்கும் எண்டெல்லாம் கதை யடிக்கிறது...' எண்டொருத்தன் சொல் லிக்கொண்டிருக்க 'வந்தாப்பிறகுதான் இதைவிட இருந்ததே பறவாயில்லை எண்டிற ஞானம் பிறக்கும்' எண்டு சுதன் முடிச்சான்.

'இதுதான் தம்பியவை எல்லா விசயத் திலையும் நடக்கிறது... இப்ப எலெக் சனும் அப்பிடித்தான் ஆகப்போகுது...' எண்டொருதன் சொன்னான். 'அதுக்கை எங்கடை திணைக்கள விசயத்திலை கொஞ்சம் வித்தியாசமாயல்லே நடக் குது... பென்சனுக்கு முந்தின கொஞ்சக் காலத்தை அனுபவிக்கச் சந்தர்ப்பம் குடுக்கிற வேலைமாதிரியல்லே கிடக்குது? இதுதான் வழக்கம் மாதிரியல்லே நடக்குது?' எண்டான் ஒராள் சலிப்போடை.

'இருக்கிறவரைக்கும் செய்வமெண்டிற மனப்பாங்கு குறைவு... விசயம் பிழை தான் எண்டு தெரிஞ்சாலும் இருக்கிற கொஞ்சக் காலத்துக்கை அதையிதை மாத்தி... ஏன் கஸ்ரப்படுவான்.... ஒரு சிக்கலுமில்லாமலுக்கு மணிவிழா ஏற் பாடுகளைச் செய்யலாமெண்டு யோசிக் கினம்போலை?' எண்டு மாஸ்ரர் சொல்ல எல்லாரும் சிரிச்சினம்.

'மாஸ்ரர்... அதுக்குத்தானே அறுபத் தைஞ்சிலை பென்சனெண்டு சொன்ன வங்கள்...' எண்டு நான் தொடங்க 'அப்பிடியெண்டாலும் அறுவத்து மூண் டிலையோ நாலிலையோதானே கதி ரைக்கு வர விடுவம்...' எண்டு சுதன் சொல்ல நானும் அவங்களோடை சேந்து சிரிச்சன். மாஸ்ரர் 'உந்த..உப்பிடியான நடைமுறையள் மாறுகிறதுதான் மாற் றம்'எண்டார். உண்மைதான் அதுக்கு எங்கடை மனநிலையல்லோ மாற வேணும்...அது நடக்குமோ?' எண்டு கொண்டு எழும்பி வீட்டை வந்திட்டன்.

# வாரிசு

## உணர்ச்சிகளின் கொந்தளிப்பு



குடும்பத்தில் இருக்கும் ஒரே தறுதலைத் தம்பி அண்ணன் களின் பகையையும் அப்பாவின் தொழில் பகையையும் சமாளித்து குடும்பத்தை எப்படி மீண்டும் ஒட்ட வைத்தார் என்று கேட்டால் பதில்தான் 'வாரிசு' திரைப்படம்.

ஜெயபிரகாஷ் குரூப் ஆஃப் கம்பெனிக்கும் (பிர காஷ்ராஜ்), ராஜேந்திரன் குரூப் ஆஃப் கம்பெனிக்கும் (சரத்குமார்) இடையே தொழில் போட்டி நீண்ட காலமாகவே இருக்கிறது. வழக்கம் போலவே ராஜேந் திரன் குடும்பம்தான் கதையின் நடுநாயகம். ஜெய பிரகாஷ் அந்தக் குடும்பத்தைக் கொத்த முயல்வதையே வேலை யாகக்கொண்டிருக்கும் விசப் பாம்பு. (அவருக்கு வேறு தொழிலேதும் இருப்பதாக இயக்குநர் காட்டவேயில்லை)

இதுபோன்ற பணக்காரக் குடும்பங்களின் வழக்கமான புதுமை விரும்பியான மகனுக்கும் தன் அதிகாரத்தை ஆட்சிக் கட்டுமானத்தைப்

பேண விரும்பும் தகப்பனுக்குமான மோதல் விஜய்க்கும் சரத்குமாருக்கும். அப்பா சரத்குமார் குடும்பத்தையே வியாபாராப் பாணியில் கொண்டு நடத்த முற்படும் நபர். அவரிடமிருந்து விலகி, குடும்பத்தை பாசத்தின் இருப்பிடமாகப் பார்க்கும் மகன் விஜய். மற்றைய இரு மகன்களும் அப்பாச் சொல் கேட்கும் நல்லவர்கள். ஆனால் உள்ளே, எண்ணத்தால் உண்மையில் கெட்டவர்கள். அப்பாவிற்குக் கெட்டவனான, அடங்காதவனான விஜய்யோ.... மீதியைச் சொல்ல வேண்டுமான தமிழ் திரைப்படம் பார்ப்பவராக இருந்தால் அது உங்களுக்கே தெரிந்த ஒன்று தானே!

இந்த நிலையில் தொழிலதிபர் ராஜேந்திரனின் அடுத்த வாரிசு யார் என்பதைச் சொல்வதுதான் 'வாரிசு' படத்தின் திரைக் கதை.




மட்டுமே வந்து செல்கிறார். படத்தில் சரத்குமாரின் நடிப்பு அவர் ஏற்றிருக்கும் கதாபாத்திரத்தின் தன்மையை அதற்கே உண்டான மென்சோகத்துடன் கடத்தியிருந்தது. அனுபவமான நடிகர் என்பதை முகபாவனை கள் ஊடாக நிரூபிக்கிறார். பிரகாஷ்ராஜ், பிரபு, யோகிபாபு, ஷாம், ஸ்ரீகாந்த், ஜெயசுதா உள்ளிட்டோர் கொடுத்த வேலையை செய்கின்றனர் என்ப தற்கு மேல் அவர்களிடம் வேலை வாங்க இயக்குநர் முயலவில்லை.

'குடும்பங்கள் கொண்டாடும் வெற்றி' என்ற அடைமொழியை உறுதியிட்டு எழுதும் அளவிற்கு உணர்வு சார்ந்த காட்சிகளை திகட்ட திகட்ட கொடுத்திருக்கிறார் இயக்குநர் வம்சி. படத்தின் முதல் பாதியில் வரும் 'அம்மா' பாடலும், அதற்கான சூழ்நிலையும், விஜய்க்கும் அவரது அம்மாவுக்குமான பாசப் பிணைப்பு ஈர்க்கி



40 வயது கடந்த பின்னரும் மிரட்டும் நடன அசைவுகள், புது தலைமுடி அலங்காரம், 'கொஞ்சும்' முகபாவனைகளால் தோற்றத்தில் அழகூட்டி வயதை வெறும் 'எண்' என மீண்டும் நம்ப வைத்திருக்கிறார் விஜய். 'ரஞ்சிதமே' பாடலின் கடைசி நிமிடங்களில் ஒரே ஷாட்டில் அவரது ஆட்டம் அவரது ரசிகர்களுக்கு விருந்துதான். குழந்தைத் தனமான சில பாவனைகளும், அதற்கேற்ற உடல்மொழியும், 'தீ' தளபதி பாடலில் அவரின் நடையும் ரசிகர்களால் கொண்டாடப்படுகின்றது.

ராஷ்மிகா மந்தனாவின் பங்கு கதைக்கும், கதையின் பங்கு ராஷ்மிகாவுக்கும் தேவைப்படாதது இயக்குநருக்குப் புலப்படாமல் போனது ஏனோ?. கதாநாயகி என்றொருவர் இருக்கவேண்டும் என்பதற்காக மட்டுமே அவரைப் போட்டிருக்கிறார்கள். காதலுக்காகவும், பாடலுக்காகவும்

றது. குடும் பத்துக்காகவே வாழும் அம்மா, அம்மாவுக்காவே உருகும் விஜய். என்பதுதான் படத்தின் அடிநாதமே. இந்த அடித்தளத்தில்தான் திரைக் கதை கட்டியெழுப்பப்பட்டி ருக்கின்றது.

மொத்தப் படத்தையும் தமனின் இசை திரைக்கதையுடன் இணைந்து காட்சிகளை உந்தி அடுத்தடுத்த கட்டங்களுக்குத் தள்ளிப் பலம் சேர்க்கிறது. குறிப்பாக 'தீ தளபதி' பாடலின் விஷுவல்ஸ் அதற்கான விஜய்யின் மாஸான நடை நிச்சயம் ரசிகர்களுக்குக் காட்சி விருந்து. பாடல்கள் கேட்க நன்றாக இருந்தாலும், கதை ஓட்டத்திலிருந்து விலகி திணிக்கப்பட்டிருப்பது பலவீனம். யோகிபாபுவுக்கும் - விஜய்க்குமான நெருக்கம் கைகொடுக்கிறது. சில இடங்களில் விஜய் முயற்சித்திருக்கும் நகைச்சுவைகள் புன்முறுவ வைக்கின்றன.



# துணிவு

## ஒட்டைகள் நிறைந்த கொள்ளை



தமிழ் நாட்டில் உள்ள ஒரு பெரிய வங்கியை கொள்ளையடிக்க வருகிறது ஒரு கும்பல். வந்த இடத்தில் வங்கியில் இருக்கும் ஒரு நபர் அந்தக் கொள்ளையர்களை எல்லாம் அடித்துத் துவம்சம் செய்து அவர்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகின்றார். பின்னர் தானும் வங்கியை கொள்ளையடிக்கத் தான் வந்துள்ளார் என்று கூறி ஆச்ச ரியப்படுத்துகின்றார். அதுவுமில்லாமல் கொள்ளைகும்பல் கொள்ளையிட வந்த தொகையைவிடவும் பல மடங்கு அதிக தொகை வங்கியில் இருப்பதாகவும் அதைக் கொள்ளையிடத் தன்னேடு சேர்ந்துகொள்ளும்படியும் அந்தக் கும்பலை ஈர்த்துக்கொள்கிறார். பின்னர் அந்தக் கொள்ளையை அவர் அரங்கேற்றினாரா? கொள்ளையடிக்கப்படப்போ கும் பணம் எங்கிருந்து எப்படி வந்தது? என்பதைச் சொல்வது தான் 'துணிவு' திரைப்படம்.

வங்கியை கொள்ளையிட வந்த கும்பல் வில்லன் தரப்பைச் சேர்ந்தது. அதைத் தன்னோடு ஈர்த்துக்கொண்டு வங்கிக் கொள்ளையை நிகழ்த்துபவர் அஜித் குமார். படத்தில் அவர் ஒரு பன் னாட்டு பாதாளக் கும்பலின் தலைவன். டார்க் டெவில் என்பது அவரது பாத்திரத்தின் பெயர்.

அஜித்தின் பலத்துக்கும் அவரது ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கும் ஏற்ற கதையைத் தயார்ப்படுத்தியிருக்கி றார்கள். அதில் தர்க்கப் பிழைகள் தாராளமாக இருந்தாலும் ரசிகர்கள் அதைப் புறக்கணித்து தமது நாயகனைக் கொண்டாடுகின் றார்கள். "என்டர்டெயின் பண்றவங்களைத் தான் மக்கள் தலைவனா ஏத்துப்பாங்க,

படத்தின் மிகப் பெரிய பிரச் சினை, அதன் மையக்கதை. விஜய்க்கும் சரத்குமாருக்கும் இடையிலான பிரச்சினையை காட்டியிருக்கும் விதம் அழுத் தமில்லாதது. அதேபோல வில் லனாக வரும் பிரகாஷ் ராஜ் கதாபாத்திரத்தின் பல வீனமான எழுத்து படத் தையே பலவீன மாக்குகிறது. படத்தின் தொடக் கத்தில் 'சூர்யவம்சம்' காட்சிகள் நினைவுக்கு வர, பின், 'சந்தோஷ் சுப்ரமணியம்' எட்டிப் பார்க் கிறது. 'செக்கச் சிவந்த வானம்' படத்தைப் பார்க்கும் உணர்வும் எழாமலில்லை. காரணம், அந்தப் படத்தின் கேங்க்ஸட ருக்கு பதிலாக பெரு நிறுவனத் தொழிலை பின்புலமாக வைத் தால் 'வாரிசு' கதை ஒட்டி விடு கிறது. அப்பா - மகன்கள், அண்ணன் தம்பிகளுக்கிடையி லான உணர்வூட்டக் காட்சிகள் மூடையில் திணிக்கப்பட்ட துணிகளைப் போல பிதுங்கி புடைத்திருக்கிறது.

கணிக்கக்கூடிய கதையு டன் காட்சிகளாகவும் எளிதில் கணி க்க முடிவதால் சுவாரஸ்யம், விறுவிறுப்புக்கு வறட்சி நிலவு கிறது. தேவையில்லாத இடங் களில் பாடல்களும், சண்டைக் காட்சிகளும், போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் வாக்குப் பதிவு என கூறி வைக்கப்பட்ட காட்சி ஒன்றும் சோதிக்கிறது. விஜய் நடித்த முந்தைய படங்களின் வசனங்களை ரீமேடாக்கியிருப் பது சில இடங்களில் கைகொடுக் கிறது. பல இடங்களில் 'தாங்க முடியலையே' என்று கதற வைக்கிறது. எஸ்.ஜே.சூர்யாவின் சிறப்புத் தோற்றம் ரசிக்க வைக் கிறது. சில இடங்களில் அதீத செயற்கை அடிதடிக் காட்சி கள் தெலுங்கு படங்களை நினை வூட்டுகின்றன.

குறிப்பாக, விஜய் போன்ற பெரிய நடிகர் ஒருவரின் படத் தில் சிறுபான்மையினர் ஒரு வரை குற்றவாளியாக்கி, எளிய மக்களை மாணவிகளை கடத் துபவர்களாக காட்டும் காட்சி கள் அறப்பிழைகள். கார்த்திக் பழனி ஒளிப்பதிவும், பிரவீன் கே.எல் படத் தொகுப்பும் மொத்த படத்துக்குமான ஆறு தல்.

கருத்துச் சொல்றவங்களை இல்லை" என்று படத்தில் ஒரு வசனம் வருகிறது. படத்தின் திரைக் கதையையே அதனடிப்படையில்தான் இயக்குநர் உருவாக்கித் தொலைத்திருக்கிறார்.

ஒரு மனிதனின் பணத் தேவை, எப்படி ஒருவனை ஏமாற்றுபவனாகவும், இன்னொருவனை ஏமாறுபவனாகவும் மாற்றுகிறது என்பதை 'சதுரங்கவேட்டை'யில் சொன்னார் வினோத், இதில் எதைச் சொன்னாலும் எளிதாக



ஏமாந்துவிடும் மக்களின் அறியாமையைப் பயன் படுத்திக் பெரும் கொள்ளையை நிகழ்த்தும் வங்கிகளின் இன்னொரு பக்கத்தைக் காட்டியிருக்கிறார்.

அவசரத்துக்கு கடன் தருகிறோம் என்று அள்ளிவிடும் வங்கிகளின் விதிமுறைகள், கடனட்டை, முதலீடுகள் என பக்கம் பக்கமாகக் கண்ணுக்கு எளிதில் தெரியாத எழுத்துகளில் தரும் படிவங்களில் என்ன இருக்கிறது என்பதை தோலுரித்து, மக்களை எச்சரிக்கிறது படம்.

படத்தின் மிகப்பெரிய பலம் அஜித். வயதுக்கேற்ற தோற்றத்தில் வழக்கம்போல அதகளம் செய்கிறார். அவரின் வில்லத்தன ஆட்டம் ரசிக்க வைக்கிறது. அடி தடிக் காட்சிகள், 'சில்லா சில்லா' நடனம், நையாண்டி வசனங்கள் என நன்றாகவே இருக்கின்றன. அவருக்கு உதவி செய்யும் கண் மணி பாத்திரத்தில் மஞ்சு வாரியர் அதிரடி அடிதடி நாயகி அவதாரம் எடுத்திருக்கிறார். படம் முழுவதும் அவர் வந்தாலும் நிறைவு தரும் பாத்திரம் என்று சொல்லி விட முடியாது.

அமைதியான காவல் ஆணையர் பாத்திரம் சமுத்திரக்கனி, நின்ற இடத்தில் இருந்தே தனது கோபத்தை வெளிப்படுத்துகிறார். தெலுங்கு நடிகர் அஜய், வில்லன் ஜான் கொக்கேன், வங்கி அதிகாரி ஜி.எம்.சுந்தர், காவலர் மகாநதி சங்கர், வீரா உட்பட பலர் தங்கள் பாத்திரம் உணர்ந்து நடித்திருக்கிறார்கள். காவல் ஆய்வாளர் பகவதி பெருமாளுக்கும் தொலைக்காட்சி செய்தி அலை வரிசை செய்தியாளர் மோகனசுந்தரத்துக்கும் நடக்கும் உரையாடல்கள் நெற்றியடி ரகம்.

'மனுசன் ஏன் சுயநலமா இருக்கான். சுயநலமா இருக்கறதால தான் மனுசனாவே இருக்கான்" என்பது போன்ற வசனங்கள் கவனம் ஈர்க்கின்றன. சுப்ரீம் சுந்தரின் சண்டைக் காட்சிகளில் தெறிக்கின்றன துப்பாக்கிச் சன் னங்கள். நீரவ் ஷாவின் ஒளிப் பதிவு, அடிதடிகள் காட்சிகளில் மாய மந்திரங்களை நிகழ்த்துகிறது. ஜிப்ரானின் பின்னணி இசை படத்துக்கு பலம் சேர்க்கிறது.

முதல் பாதியில், ஒவ்வொரு காட்சியும் அடுத்தது என்ன என்ற ஆர்வத்தை தூண்டுகிறது. ஆனால் இரண்டாம் பாதி திரைக்கதையில் தடுமாற்றம். குறிப்பாக அந்த பின்னணிக் கதை எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. அஜித், மஞ்சு வாரியரின் பின்னணி பற்றி போதுமான விளக்கமும் இல்லை. அதை சரி செய்திருந்தால், 'துணிவு' ரசிக்கும்படி இருந்திருக்கும்.

---

## படைக்...

பேராகக் குறையும் வகையில் இந்த நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என்று அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித்த பண்டார தென்னக்கோனை மேற்கோள்காட்டி அமைப்பு விடுத்திருக்கும் இந்தச் செய்திக் குறிப்பில், பாதுகாப்புக்காகச் செலவிடப்படும் பணமும் அரச செலவினம்தான் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார் என்று கூறப்பட்டுள்ளது.

நாட்டின் படைத்துறை வலிமையும் நிலையான பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை, ஒன்றுக்கொன்று வெளிப்படையாகப் பேசிக்கொள்ளாதவை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

2030ஆம் ஆண்டளவில் தரைப் படையை ஒரு லட்சம் பேர் என்கிற சரியான அளவில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார். அதற்கிடையில் தொழில்நுட்ப ரீதியாகவும் தந்திரோபாய ரீதியாகவும் சிறந்த மற்றும் சமநிலையான படையை உருவாக்குவதே இந்தத் திட்ட வகுப்பின் மூலோபாய நோக்கமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து 14 வருடங்கள் கடந்துவிட்டபோதும் அதன் படைகளின் எண்ணிக்கை மிகப் பெரியதாகவே பேணப்பட்டு வருகின்றது. இதனால் நாட்டின் பாதீட்டில் கல்வி, சுகாதாரத்திற்கு ஒதுக்கப்படும் நிதியிலும் பார்க்க அதிகமான நிதி பாதுகாப்புத்துறைக்கே ஒதுக்கப்படுகின்றது. இது இலங்கை போன்ற சிறிய நாட்டுக்குப் பெரும் சுமை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

நாட்டில் இப்போது அச்சுறுத்தல்கள் இல்லாத நிலையில் படையினரின் எண்ணிக்கையை குறைப்பதன் அவசியத்தை முன்னாள் படைத்துறை உயர் அதிகாரிகளும் அண்மையில் வலியுறுத்தியிருந்தனர். படையினர் எண்ணிக்கை குறைக்கப்படுவதுடன், வடக்கு கிழக்கில் படையினரினதும் முகாம்களினதும் எண்ணிக்கை 1983இற்கு முன்பிருந்த நிலைக்குத் திரும்ப வேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பில் அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.01.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781